★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் கெற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
RASI
ராசி சில்க்ஸ்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 22 வெள்ளிக்கிழமை (06—01—1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 41

# தமிழாராய்ச்சி மாநாட்டின் அமர்வை பகிஷ்கரித்து அறிஞர்கள் ஆட்சேபம்!

### காலநிலை சீர்கேடு

நாட்டின் கிழக்குப் பகுதியின் பெரும்பாலான பகுதிகளில் இன்று வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்குமென்றும் கிழக்கு மாகாணத்திலும் ஊவா மாகாணத்திலும் மழை ஆங்காங்கே பெய்யும் என்றும் வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளில் இன்று மாலை இடிமுழக்கத்துடன் கூடிய மழைபெய்யும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அராலியிலும், பருத்தித்துறையிலும்

## மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி மரணம்

அராலிப் பகுதி கேணி ஒன்றிலும், பருத்தித்துறைப் பகுதி கடலிலும் நேற்று மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி மரணமானார்கள்.

அராலி தெற்கு மாதாங் கோயில் கேணிக்கு சகமாணவர்களுடன் குளிக்கச் சென்ற லோரன்ஸ் அஞ்சலோ அன்ரன் (22 வயது) என்ற யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவனே மரணமானவர் ஆவார்.

வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த மாணவரான இவரின் பெற்றோர் பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மற்றைய சம்பவத்தில்—

பருத்தித்துறை மூர்க்கம் கடலுக்கு குளிக்கச் சென்ற ஹாட்லிக் கல்லூரி மாணவனான இந்திரலிங்கம் தெய்வேந்திரன் [17 வயது] என்பவர் மரணமானார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த இந்த மாணவர் இம்முறை தமிழீழ கல்வித் தேர்வில், பருத்தித்துறை கோட்ட மட்டத்தில் சிறப்புச் சித்தி பெற்றவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4-15-13-161-173

## சிகரெட், மதுபானங்களின் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 6

சிகரெட்டுகள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மதுபானவகைகள் ஆகியவற்றின் விலைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கலால் ஆணையாளர் டபிள்யூ. என். எஸ். சந்திரரத்தின தெரிவித்துள்ளார்.

சகல மதுபான வகைகளினதும் விலை போத்தல் ஒன்று 10 ரூபா வினாலும் இலங்கையில் தாயரிக்கப்படும் வெளிநாட்டு ரக மதுபானங்களின் விலை போத்தல் ஒன்று 25 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. சகல வெளிநாட்டு மதுபானங்களின் விலைகளும் போத்தல் ஒன்று 50 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிறிஸ்டல் சிகரெட் ஒன்றின் விலை 25 சதத்தினாலும் கோல்ட் லீவ் சிகரெட் ஒன்றின் விலை 50 சதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது

## தாதிமார் போராட்டம் நேற்று கைவிடப்பட்டது

கொழும்பு, ஜன. 6

அரசாங்க தாதிமார்கள் தமது சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை நேற்றுக் கைவிட்டனர்.

இன்று தொடக்கம் வழமை போன்று தமது கடமைகளை மீண்டும் செய்வதென தாதிமார்கள் நேற்றுத் தீர்மானித்தார்கள்.

அரசாங்க சேவை ஐக்கிய தாதிமார் தொழில் சங்கத் தலைவர் சங்கைக்குரிய முறுகட்டுவ ஆனந்த தேரர் தகவல் தெரிவிக்கையில், சுகாதாரத்துறை சார்ந்த ஊழியர்களின் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் கவனிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படும் என்று அரசாங்கம் உறுதியளித்ததை தொடர்ந்து சட்டப்படி வேலை செய்யும்

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வெளியேற்றியதற்குக் கண்டனம்

சென்னை, ஜனவரி 6

எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளான நேற்று இடம்பெற்ற பிரதான அமர்வுகளில் ஒன்றைப் பெரும் எண்ணிக்கையான தமிழ் அறிஞர்கள் பகிஷ்கரித்தனர்.

மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 23 பேரை மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதியாது நாட்டை விட்டு வெளியேற்றியதைக் கண்டிக்கும் விதத்திலும், அதனை ஆட்சேபிக்கும் விதத்திலும் இந்தப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

இதேவேளை, தமிழாய்ச்சி மாநாட்டில் பிரதமர் நரசிம்மராவ் கலந்துகொண்டதால் அவருக்கு மற்றொரு அரசியல் தலையிடி ஏற்பட்டுள்ளதாக அவதானிகள் சுட்டிக்காட்டினர்.

எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்றுவரை தஞ்சாவூரில் நடைபெற்றது.

இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்த வெளிநாட்டுத் தமிழறிஞர்கள் 23 பேரை அதில் கலந்து கொள்ள விடாது இந்திய அரசாங்கம் வெளியேற்றித் திருப்பி அனுப்பியது.

அதனைக் கண்டித்து, ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக நேற்றைய இறுதிநாள் பிரதான அமர்வுகளில் ஒன்றை பெரும் எண்ணிக்கையான தமிழழறிஞர்கள் பகிஷ்கரிததனர்.

ஈழத் தமிழறிஞர்கள் உட்பட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அவமதிக்கப்பட்டது தமிழ் மரபுக்கு உகந்த செயல் அல்ல என்பதனைத் தெரிவிக்கும் முகமாகவும் இந்தப் பகிஷ்கரிப்பு நடைபெற்றது.

இதே வேளை —

தமிழ் மாநாட்டில் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கலந்துகொண்டதால் அவருக்கு மற்றொரு அரசியல் தலையிடி உண்டாகியிருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

மாநில ஆளுநர், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஆகியோர்கள் ஆலோசனைகளை செவிமடுக்காமல் பிரதமர் மாநாட்டில் கலந்துகொண்டார்.

அதனால் அவர் அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

( 6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கிளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஜன. 6

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ-3)

அகிலஉலக தமிழராய்ச்சி மன்றத்தின்

## செயலாளர்களில் ஒருவராக பேராசிரியர் சிவத்தம்பி

சென்னை, ஜன. 6

நேற்று முன்தினம் தஞ்சாவூரில் நடைபெற்ற அகில உலக தமிழாராய்ச்சி மன்றத்தின் செயற்குழு மற்றும் செயலாளர் குழுக் கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உலக தமிழாராய்ச்சி மன்றத் தலைவராக மீண்டும் ஜப்பானைச் சேர்ந்த தமிழறிஞர் டாக்டர் கரோசிமா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துணைத் தலைவர்களாக இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் வி. சி. குழந்தைசாமி, பேராசிரியர் ரி மாரிமுத்து, மற்றும் பேராசிரியர் பிரான்ஸியா கொருஓபியோ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பேராசிரியர் இ. அண்ணாமலை, யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி, சிங்கப்பூரைச் சேர்ந்த பேராசிரியர் திருநாவுக்கரசு ஆகியோர் பொதுச் செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை மூன்று ஆண்டுகளுக்கு ஒருதடவை நடத்தவேண்டும் என்றும்—

மன்றத்தின் தேசியக் கிளைகளை வலுப்படுத்தவேண்டும் என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஒ-ஐ)

# என்னை அழைத்தோருக்கு தகவல் கொடுக்கக்கூட அனுமதிக்கவில்லை

### கைதான சம்பவம் குறித்து போராசிரியர் சிவத்தம்பி

கொழும்பு, ஜன. 6

சம்பவதினம் தமிழ்நாடு காவல்துறையினர் என்னை அழைத்துச்சென்றபோது, இது குறித்து, தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு எங்களை அழைத்தவர்களுக்கு தகவல் கொடுக்க முயன்றேன். ஆனால் காவல்துறையினர் அதற்கு அனுமதிக்கவில்லை.

இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட யாழ், பல்கலைக்கழக பேராசிரியர் கா. சிவத்தம்பி கொழும்பில் வைத்து பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

பேராசிரியர் சிவத்தம்பி பி.பி. ஸிக்கு அளித்த பேட்டி விவரம் வருமாறு :–

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒரு விசேட உரையாற்றுமாறு அதன் தலைவர் ஹிரோஷிமா அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து நான் அங்கு உரையாற்றுவதாக ஒத்துக் கொள்ளப்பட்டது.

மாநாட்டின் ஆரம்ப அமர்வில் பேசுவதற்கென என்னுடன் ஏழுபேர் மாத்திரம் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மாநாட்டின் செயலாளர் டாக்டர் ராஜாராம் அழைப்பை ஊர்ஜிதம் செய்து என்னுடைய கட்டுரையைக் கேட்டிருந்தார்.

இந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட நான் சென்னைக்கு டிசம்பர் 23 ஆம் திகதி சென்றேன்.

அங்கிருந்து என்னுடைய நூல் வெளியீடு விஷயங்கள் சம்பந்தமாகவும் பார்த்து விட்டு பின்னர் 30 ஆம் திகதி இரவு ரயில் மார்க்கமாக தஞ்சாவூர் சென்றேன். பின்னர் மாலையில் மாநாட்டில் கலந்துகொள்ள பதிவு செய்தேன்.

அன்று இரவு அதா

( 6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



அப்ப ஜெயலலிதாவை வளைத்துப் பிடிக்க ராவ் திட்டம் போடுகிறார் எண்டு சொல்லுங்கோ..!

## ராவை சந்திப்பதை தவிர்க்க ஆளுநர் அந்தமான் சென்றார்

சென்னை, ஜன. 6

பிரதமர் நரசிம்மராவ் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த சமயம் தமிழ் நாடு ஆளுநர் சென்னாரெட்டி அந்தமான் தீவுகளுக்குச் சென்றுவிட்டார்.

தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டாம் என ஆளுநர் சென்னா ரெட்டி பிரதமரைக் கேட்டிருந்தார்.

இந்த மாநாடு தமிழ் மொழி மற்றும் கலாசார மேம்பாட்டுக்காக நடத்தப்படவில்லை என்றும்—

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தம்மைப் பிரபல்யப்படுத்தவே மாநாட்டை நடத்துகிறார் என்றும் — ஆளுநர் சென்னா ரெட்டி பிரதமர் நரசிம்மராவிடம் தெரிவித்திருந்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழைப்பாடி ராமமூர்த்தியும் இதே கருத்தையே வெளியிட்டிருந்தார்.

ஆனால் இவர்கள் இருவரது கருத்துக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்து சந்திரிகா இன்று உரை

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மூன்றாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை இன்று காலை 9 30 மணிக்குத் தொடக்கி வைப்பார்.

தொடர்ந்து ஜனாதிபதி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையைச் சமர்ப்பித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்தும் தமது கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீதி மற்றும் அரசியல் விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நாடாளுமன்றம் இன்று பிற்பகல் கூடும்போது நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை சமர்ப்பிப்பார்.

அவசரகாலச் சட்டத்தை வடக்கு கிழக்கு பகுதிகளுக்கும் பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் நீடிப்பது தொடர்பான விவாதம் இன்று பிற்பகல் நடைபெறும். (ஒ-4)

## தமிழறிஞர் வெளியேற்றம் குறித்து முதல்வரிடம் விளக்கம் கோரப்பட்டது

சென்னை, ஜன. 6

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் சார்பில் நடந்த முதன்மை அமர்வில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்க வேண்டிய யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி சமுகமளிக்காத பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இவரையும் மற்றும் சில தமிழ் அறிஞர்களையும் மாநாட்டில் கலந்து கொள்ள விடாது திருப்பி அனுப்பியது பற்றி விளக்கம் அளிக்க வேண்டும் என்று பிரதிநிதிகள் கோரினர்.

அதற்குப் பதில் அளித்த உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழக தலைவர் பேராசிரியர் நுருறு கரோஷிமா இப்பிரச்சினை குறித்து தமிழ் நாடு முதல்வர் ஜெயலலிதாவிடம் விளக்கம் கோரப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (ஒ-ஐ)

## நேர அவகாசம் கிடைக்காததால் செய்தியாளரை கூட்டிச்செல்லவில்லை

### அனுருத்த ரத்வத்தை தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6

''அரசு—விடுதலைப் புலிகள் இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது—

''பத்திரிகையாளர்களைக் கொழும்பில் இருந்து கூட்டிச் செல்லும் ஏற்பாடுகளைச் செய்வதற்கு போதிய நேர அவகாசம் கிடைக்கவில்லை. அதனால் அவர்களைக் கூட்டிச் செல்ல முடியாமல் போய் விட்டது''—இவ்வாறு பிரதி பாதுகாப்பு அமைச்சர்கேணல் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார்.

''சமாதானப் பேச்சு நடவடிக்கைகள் வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் இடம் பெறும் என அரசு உறுதியளித்திருந்த போதிலும் இரண்டாம் கட்டப் பேச்சு விவரங்கள் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதற்கு [illegible]

(6ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் குணரத்தின இந்தியா பயணம்

கொழும்பு, ஜன. 6

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரத்ன கைத்தொழில் கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றுவதற்காக இரண்டு நாள் [illegible] கட்ந்த செவ்வாயன்று கல [illegible] நார். (உ)

## மத்திய அரசே காரணமாம்

சென்னை, ஜன. 6

தஞ்சை உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த இலங்கையைச் சேர்ந்த தமிழறிஞர்கள் திருப்பி அனுப்பப்பட்டதற்கு மத்திய அரசே காரணம் என்றும்—

மாநாட்டில் இவர்கள் பங்குபற்றுவதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது என்றும் தமிழ்நாடு தலைமைச் செயலர் அறிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தஞ்சை உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் எமக்கு ஒரு நீதி; வெள்ளையருக்கு ஒரு நீதி!

தஞ்சாவூரில் நடைபெறும் உலக தமிழாராய்ச்சி மகா நாடு தொடர்பாக சர்வதேச தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையினர் சாதுரியமாக நடந்து கொள்ள வில்லை என்றும், அவர்கள் தமிழகம் சென்று உரியவர்களோடு தொடர்பு கொண்டிருப்பின் உறவுகள் சுமுகமாக இருந்திருக்கும் என்ற பொருள் படவும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் குறித்து அக்கிளையினர் தங்கள் நிலைப் பாட்டை விளக்கி விரிவான அறிக்கையொன்றை விடுத்திருக்கிறார்கள்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-:

சர்வதேச மாநாடுகளை — குறிப்பாக ஆராய்ச்சி மாநாடுகளை — நடத்தும் பொழுது சில நெறிமுறைகளைப் பின்பற்றுவது வழமை. இத்தகைய மாநாடுகளை நடத்துபவர்களே அவற்றோடு தொடர்புடையவர்களைக் கூட்டிக் கலந்து ஆலோசிப்பது முறை. 8 ஆவது மாநாடு தொடர்பாக இத்தகைய முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை.

மாநாட்டு ஒழுங்குகள் பற்றி ஆலோசனை நடத்துவதற்கு அழைக்கப்படாதவிடத்து இலங்கைக் கிளை என்ன அடிப்படையிலே தமிழகம் சென்று பரிந்துரை வழங்க முடியும்?

ஐரோப்பிய பிரதேசங்களி

## இலங்கைக் கிளை அறிக்கை

லிருந்தும் அமெரிக்க தேசங்களிலிருந்தும் இம்மாநாட்டுக்கு வந்திருப்பவர்கள் முன்னரே சென்னைக்கு வந்து அமைப்பாளர்களைச் சந்தித்து தாம் பங்குபற்றுவது பற்றி ஆலோசனை செய்தார்களா? இந் நிலையில் இலங்கைக் கிளையினர் மட்டும் தமிழகம் சென்று ஆலோசித்திருக்க வேண்டும்; சாதுரியமாகச் செயற்பட்டிருக்க வேண்டும் என்று குறை கூறுவதன் மர்மம் யாதோ?

வெள்ளையர்களுக்கு ஒரு நீதி! இலங்கையர்களுக்கு இன்னொரு நீதி போலும்.

இம்மாநாட்டு அமைப்பாளர்கள் இலங்கைக்கு அந்நியமானவர்கள் அல்லர். அவர்களிற் சிலர் அரசாங்கத்தின் அழைப்பிலும் தனியார் நிறுவனங்களின் அழைப்பிலும் சில தடவைகள் இங்கு வந்து போனவர்கள். இலங்கையிலுள்ள நிலைமைகளை நன்கறிந்தவர்கள்.

### கசப்பான உண்மைகள்

சென்ற வருடத்திலே ஏப்ரல் மாதம் அளவில் இலங்கையிலுள்ள பலருக்கு இம்மாநாடு பற்றிய முதலாவது அறிவித்தலும் விண்ணப்பப் படிவங்களும் கிடைத்தன. பலர் அவற்றை உரிய வகையிலே நிரப்பி அவற்றைக் கட்டணங்களோடு அனுப்பியிருந்தார்கள். அதற்குப் பின் தஞ்சாவூரிலிருந்து எதுவித தொடர்பும் இல்லை.

இவ்வாறிருக்கையில் உரிய நேரத்திலும் முறையிலும் விண்ணப்பம் அனுப்பாதவர்களுக்கு இப்போது கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அமைப்பாளர்கள் பின்பற்றும் நெறிமுறைகள் ஏதேனுமுண்டா? யார் இதிலே தவறு புரிகிறார்கள்?

உரிய காலத்திலும் முறையாகவும் கட்டணம் செலுத்தி விண்ணப்பம் செய்திருந்த இலங்கைக் கிளையின் உறுப்பினர்களுக்கு இந்த மாநாட்டிலே பங்கு கொள்ள வசதி செய்யுமாறு அவர்களுக்கு எழுதியிருந்தோம். அவர்கள் அதையும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

### அமைச்சர்களே விளக்கம் தர வேண்டும்

தமிழகத்திலே இம் மாநாடுகள் நடைபெறுமிடத்து இலங்கை அரசுக்குச் சம்பிரதாயப்படி அழைப்பு விடுப்பது வழமை அந்த அழைப்பை ஏற்று யாரை அனுப்புவது என்று நிச்சயிப்பது அரசாங்கத்தின் மனோபாவத்தைப் பொறுத்தது. ஆனால் இம்முறை அரசாங்கத்திற்குத் தானும் அழைப்பு வந்ததா?

உண்மையை எடுத்துக் கூறுவது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைச்சர்களின் பொறுப்பாகும்.

இங்கே தமிழகத்திற்போல மாநில அரசொன்றில்லை. ஆயினும் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் சேவை புரியும் உயரதிகாரிகள் தங்கள் விண்ணப்பங்களுக்கு நேர்ந்த கதியினைப் பத்திரிகை மூலம் விளக்கியுள்ளமை யாவரும் அறிந்த விடயம்.

தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு நிறுவனத்திற்கேனும் முறையான அழைப்பு வந்ததா? அப்படி வந்ததாக இதுவரை இங்கு செய்திகள் வரவில்லை. இந்த உண்மைகளை மூடிமறைப்பதால் ஏதாவது நன்மையுண்டா?

இலங்கைப் பல்கலைக்கழகங்களிலும் அவற்றுக்கு வெளியிலும் உள்ள சுயகௌரவமுடைய கல்விமான்களும் பிரமுகர்களும் அபிமானிகளும் முறையான அழைப்பின்றி எந்தக் கூட்டத்திற்கும் போக மாட்டார்கள்.

கிளாலிப் பிரயாணத்தின் சிரமங்களைப் பொருட்படுத்தாது இம்மாநாடு தொடர்பான ஆர்வத்தினால் கொழும்புக்கு வந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பலர் அழைப்பில்லை என்பதை அறிந்து திரும்பிச் சென்றுள்ளனர். இது ஒரு கௌரவப் பிரச்சினை என்றும் அழைப்பில்லாது போய் தம்மை ஏற்குமாறு நெருக்குவது முறையற்ற செயலென்றும் சொல்லிவிட்டு அவர்கள் திரும்பிச் சென்று விட்டனர்.

இந்தப் பிரச்சினை தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான பிரச்சினையன்று; இந்திய பல்கலைக் கழகங்களிலுள்ள பீடாதிபதிகளுக்கும் பேராசிரியர்களுக்கும் எமக்கும இடையிலான பிரச்சினையுமன்று; எனவே தான் 8 ஆவது மாநாடு தொடர்பாக எவரும் இங்கு கண்டன அறிக்கைகள் வெளியிட வேண்டாமென்று முன்னைய அறிக்கையிலே கூறியிருந்தோம். எனவே நாம் கதையைவளர்த்துக் கொள்ள விரும்பவில்லை. ஆயினும் குற்றம் எங்கோவிருக்க அதனை எம்மீது இங்குள்ளவர்கள் சுமத்துமிடத்து மௌனம் சாதிக்க முடியாது.

அண்மையில் ஐரோப்பிய தேசமொன்றிலே சர்வதேச மாநாடொன்று நடைபெறவுள்ளது. ஆராய்ச்சியாளர் மட்டுமே அதில்கலந்து கொள்வார்கள். தமிழாராய்ச்சியிற் புலமைபெற்ற மூதறிஞராகவுள்ள ஐரோப்பியரும் அமெரிக்கரும் அங்கு வருவார்கள். அச்சமயம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் அலுவல்களைச் சீரமைக்க வேண்டிய தேவைகளை அவர்களுக்கு நேரிற் சொல்லிஆவன செய்வோம்.—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-ஐ)


## உடுவில் மகளிர் கல்லூரி
## பட்டப்படிப்புகள் பிரிவு

**B. A. ( Part I ), B.A. (Final)**
(யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

ஆரம்பம்: **09-01-95**
திங்கள் 3 மணி

(சி-117)



## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## DR. தில்லையம்பலம்
# பயிற்சி நிலையம்

ஆரம்பம்: 18 - 01 - 1995

மனைப்பொருளியல் டிப்ளோமா பயிற்சிகள்: ) 1 வருடம்

1. தையற் கலை — உடை தயாரித்தல்
   — Machine Embroidery
2. சமையற் கலை — Eastern & Western
3. கேக் ஐசிங்
4. பூ வேலை (Stockinet)
5. சிகையலங்காரம்
6. கைப்பணிகள்

தட்டெழுத்து - சுருக்கெழுத்து
1. ஆங்கில
2. தமி

SPOKEN ENGLISH

★ பயிற்சி முடிவில் தராதரப் பத்திரம் வழங்கப்படும்.

— அதிபர்.

(சி-116)



## கண்ணீர் அஞ்சலி

பலாலி ஆசிரிய கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளர் நேசமலர் கனகலிங்கத்தின் அருமைக் கணவரும், பிரபல கணித ஆசிரியரும், எமது பழைய மாணவரும் ஆகிய

### சரவணமுத்து கனகலிங்கம்

அவர்கள் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

விரிவுரையாளர் குழுமம்,
பலாலி ஆசிரிய கலாசாலை.

திருநெல்வேலி. (34547)



## அஞ்சலி

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரியம்மன் வைகாசி விசாகப் பொங்கல் ''வைத்தியர் வளந்து'' என வளங்கி வரும் நாயக வளந்து, அவ்வூர் சமரபாகுதேவன் வளவு இல்லத்திலிருந்து நெடுங்காலமாக எழுந்தருளுகையில், இவ்வில்லத்தில் திருவளந்தோடு வளர்ந்த ஐவரில் மூன்றாமவரும், 150 ஆண்டுகளுக்கு முன் திருவளந்து எடுத்தலை ஆரம்பித்த அமரர் நாகப்பர் வைத்திலிங்கம் அவர்களின் பேர்த்தியுமான, வளந்துப் பங்காளர்

### திருமதி க. நவமணி
அவர்களின்

ஆத்மா சாந்தியடைய அம்மன் திருவருளை வேண்டுகிறோம்.

கா. மாணிக்கவாசகர்,
வளந்து உரிமை காரர்.

யாழ்ப்பாணம்.
05-01-1995.

(34542)


# நள்ளிரவு விடுதிக்கு வந்த பொலீஸார் உங்கள் "வீஸா கான்ஸல்" என்றனர்

## பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியர் அறிக்கை

கொழும்பு, ஜன. 6

''31 ஆம் திகதி நள்ளிரவு 12-45 மணிக்கு நாம் தங்கியிருந்த விடுதிக்கு திடீரென பொலீஸார் வந்தனர். நாளை (ஞாயிறு) அதிகாலை 4-30 மணிக்கு கொழும்பு திரும்பத் தயாராக இருங்கள் என்றனர். நாம் அவர்களிடம் காரணம் கேட்டோம். அதற்கு அவர்கள் ''வீஸா கான்ஸல்'' என்றார்கள்.''

தஞ்சாவூர் உலகத் தமிழ் மாநாட்டிற்குச் சென்று அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களில் ஒருவரான யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் முன் கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு திரும்பியதும் பேராசிரியர் சண்முகதாஸும் அவரது துணைவி மனோன்மணி சண்முகதாஸும் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''நாமிருவரும் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிமன்ற அழைப்புக் கிடைத்து இம் மாநாட்டில் பங்குபற்றுவதற்கு எமது சொந்தச் செலவில் தஞ்சாவூர் சென்றோம். அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் எம்மை பேராளர்களாகப் பதிவு செய்து, மாநாட்டு ஆவணங்கள் யாவற்றையும் தந்து பேராளர்களுக்கான சிறப்பு விடுதியிலும் எம்மைத் தங்கச் செய்தது.

பிற நாட்டுப் பேராளர்களுக்கான சுற்றுலாவுக்கும் எமக்கு அழைப்புத் தரப்பட்டது. ஆனால், திடீரென 31 - 12 - 94 இரவு 12-45 மணிக்கு காவல்துறையினர் எமது விடுதிக்கு வந்து ''உங்களைத் திருப்பி அனுப்புகிறோம். விடியற்காலை 4-30 மணிக்குப் பயணத்திற்குத் தயாராக நில்லுங்கள்'' — என்று கூறினர்.

''எம்மை மட்டும் இப்படி அனுப்புகிறீர்களா?'' என்று நாம் கேட்டபோது பேராசிரியர் கா. சிவத்தம்பி குடும்பத்தினரும் உங்களுடன் அனுப்பப்படுகின்றனர் என்று கூறினார்கள்.

1-1-95 காலை ஆறு மணிக்கு எங்களைக் காவல்துறையினர் திருச்சி நகரத்துக்கு அழைத்து வந்தனர். அங்கு ஒரு சுற்றுலாப் பயணிகள் விடுதியிலே தங்க வைத்து 2-1-95 அன்று 'எயர்லங்கா' விமான மூலம் கொழும்புக்கு அனுப்பி வைத்தனர்.

### ஆய்வுக்கட்டுரை படிக்கவே அழைத்தனர்

அனைத்துலகத் தமிழ் ஆய்வாளர்கள் என்ற தகைமையிலே உலகத் தமிழ் ஆராய்ச்சிமன்றம் எம்மையும் இம் மாநாட்டிலே பங்குபற்ற அழைத்தது. தமிழ் ஜப்பானிய உறவு பற்றிய ஆய்வுத் தரவுகளை (கடந்த பத்தாண்டு கால ஆய்வுத் தரவுகளை) இம் மாநாட்டில் அறிவிக்கை செய்து, அது பற்றிய கருத்துரைகளை ஏனைய அனைத்துலகத் தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள் அறிந்து கொள்வதற்காகச் சிறப்புக் கருத்தரங்கில் பங்குபற்றிக் கட்டுரை படிக்கவே எம்மை அழைத்தனர். ஆனால், இந்த ஆய்வுத் தரவுகளை எல்லோரும் அறிவதை விரும்பாமையாற் போலும் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிமன்றம் எம்மைத் திருப்பி அனுப்பியுள்ளது என எண்ணுகிறோம்.

ஏனெனில் தற்போதைய உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவர் இந்த ஒப்பீட்டாய்வுக்குக் கடந்த 10 வருடங்களாக எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளார்.

சென்ற வருடமும் இந்த ஆய்வை 13 வருடங்களாக எம்முடன் இணைந்து செய்து வருபவரும் ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழ் — ஜப்பானிய உறவு பற்றிய கோட்பாட்டை முதன் முதல் தெரிவித்தவரும் தொடர்ந்து 6ஆவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இவ்வொப்பீட்டாய்வுத் தரவுகளை வெளியிட்டவரும் டோக்கியோ கக்சுயின் பல்கலைக்கழக ஜப்பானியமொழியியற் பேராசிரியராயிருந்து தற்போது வாழ் நாள் பேராசிரியராயிருக்கும் சுசுமு ஓனோவைப் பற்றியும் அவரது ஆய்வைப் பற்றியும் இவர் எதிர்த்து ஜப்பானிலே கட்டுரை எழுதினார்.

இம்முறையும் பேராசிரியர் சுசுமு ஓனோவுக்கு அழைப்பு தமிழ் ஆராய்ச்சி மன்றம் சிறப்புரைக் கருத்தரங்கில் இடம் அளிக்கவில்லை. எனவே, எம்முடைய ஆய்வுத் தரவுகளை அனைத்துலகம் அறிவதைத் தடை செய்ய வேண்டுமென்ற நோக்கம் உலகத் தமிழாராய்ச்சி மன்றத் தலைவருக்கு இருந்திருக்க வேண்டும். இல்லாவிடில் இவ்வாறு தமிழ்-ஜப்பானிய ஒப்பீட்டு ஆய்வாளர் மாநாட்டில் பங்குபற்றுவதைத், தடை செய்யப்படுவதைக் கண்டு மௌனமாக இருந்திருக்கமாட்டார் எனஎண்ணுகிறோம்.

நாம் அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளில் கடந்த காலங்களிலும் (1968, 1970, 1974, 1981, 1987) பங்குபற்றி ஆய்வுக் கட்டுரைகள் படித்துள்ளோம். 1981 இல் நடைபெற்ற மாநாட்டில் படிப்பதற்கென மூன்று இலங்கைத் தமிழரின் கட்டுரைகளே ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவர்களுள் ஒருவர் மனோன்மணி ஆவார்.

எமது இலக்கு தமிழ்மொழியின் வளத்தையும் சிறப்பையும் பேணுவது. இன்னும் இன்று சிறப்பாகப் பிறமொழிகளின் வளர்ச்சிக்குத் தமிழ் எந்த வகையில் உதவி செய்கின்றது என்பதைப் பிற உலக ஆய்வாளர்கள் அறியச் செய்வதுமே இதனை நன்கு வெளிப்படுத்துகின்ற சான்றாக இரு கட்டுரைகள் எட்டாவது மாநாட்டில் படிக்கப் படவிருந்தன இந்த ஆய்வுக் கட்டுரைகள் அங்கு படிக்கப் படாவிட்டாலும் அனைத்துலகமும் அறியும் வகையில் அச்சிடப்பட்டு வெளியிடப்படும். தமிழ் ஆய்வு புறக்கணிக்கப்படுவதற்கு நாம் உடந்தையாக இருப்பது தவறு. எமது பணி தமிழ்ப் பணியே.

எமது மூத்த தலைமுறையினராகிய பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் வேலுப்பிள்ளை போன்றோர் இம் மாநாட்டிலே பங்கு பற்றாமல் தடை செய்யப்பட்டமை எமக்கு மிகவும் கவலையைத் தருகிறது. எமது எதிர்காலத் தலைமுறையினர் எம்மைப் போல எமது தமிழ்மொழியை பேண வேண்டும் என்பதை மனம்கொள்ள வேண்டும்.''

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 6

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சி இடம்பெறும். (ஐ)

## மாணவரிடையே பேச்சு போட்டி

திருநெல்வேலி இராம கிருஷ்ணாலயம் யாழ். கல்வி வலயம் ஒன்றைச் சேர்ந்த ஆண்டு 6 வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களிடையே பேச்சுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

பாடசாலை மட்டப்போட்டிகள் இம்மாத இறுதியிலும்—

கோட்டமட்ட போட்டி அடுத்தமாதம் 5 ஆம் திகதியும் இறுதிப் போட்டி அடுத்த மாதம் 26 ஆம் திகதியும் நடைபெறும். [ஐ]

## சித்தாயுர்வேத பரீட்சை மாதஇறுதியில்கொழும்பில்

யாழ்ப்பாணம் ஜன.6

யாழ்ப்பாண சித்தாயுர் வேத வைத்தியக் கல்லூரியின் இடைக்கால இறுதிப்பரீட்சையின் எழுத்துப்பரீட்சை ஜனவரி 30,31 ஆம் திகதிகளிலும் வாய்மொழிப் பரீட்சை பெப்ரவரி 1ஆம் திகதியும் கொழும்பில் நடைபெறும்.

இதற்கான தகைமைகள் இருந்தும் இதுவரை விண்ணப்பம் செய்யாதிருக்கும் விருப்பமுடைய விண்ணப்பதாரிகள் இருப்பின் அவர்கள் எதிர்வரும்15ஆம்திகதிக்குமுன் தபால் மூலம் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பும்போது பெயர், அனுமதிப் பத்திரம் அனுப்பக்கூடியவிலாசம், தோற்ற விரும்பும் விடயங்கள், கல்லூரி அதிபரின் அத்தாட்சி போன்ற விடயங்கள் கட்டாயமாக உள்ளடக்கியதாகவும், கல்லூரி அதிபரால் அத்தாட்சி பெற்றதாகவும் இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## லாம்பு கொழுவும் கம்பி சிறுவனுக்கு யமனாகியது

### நவிண்டிலில் சம்பவம்

யாழ்ப்பாணம் ஜன.6

அரிக்கேன் லாம்பு கொழுவும் கம்பி தலையில் ஏறியதால் சிறுவன் ஒருவர் மரணமானார்.

கரவெட்டி மத்தி நவிண்டிலைச் சேர்ந்த பாலேந்திரன் விதுஷன்(வயது 9) என்பவரே இறந்தவர் ஆவார்.

சம்பவதினம் இச் சிறுவன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சமயம் பதிவாகத் தொங்கிய அரிக்கேன் லாம்பு கொழுவும் கம்பியில் தட்டுப்பட்டதாகவும் — கம்பி கீழே விழ அதன் மீது விழுந்த சிறுவனின் தலையில் கம்பி ஏறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சிறுவன் உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரிக்கும் பின்னர்யாழ்.போதனாவைத்தியசாலைக்கும்எடுத்துச் செல்லப்பட்டார்.

நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு சில மணிநேரத்தில் அவர் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-15-13)

## இனம் தெரியாத சடலம்

யாழ்ப்பாணம், ஜன. 6

அநாதரவான நிலையில் வீதியோரம் காணப்பட்டதாக இனந்தெரியாத வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. [இ-15]

## புலமைப்பரிசில் வைபவம்

யாழ்ப்பாணம், ஜன. 6

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை நடத்தும் காரைநகர் மாணவர்களுக்கு ஆண்டு ஐந்து 1994 புலமைப் பரிசில்கள் வழங்கும் வைபவம் இன்று 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ரன் கல்லூரியிலும், நண்பகல் 12 மணிக்கு வலந்தலை தெற்கு அ.மி. த. க. பாடசாலையிலும் நடைபெறும்.

(க)

## மூதூரில் தமிழர் சுட்டுக்கொலை

திருகோணமலை, ஜன. 6

மூதூரில் விறகுவெட்டச் சென்ற தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஐந்து பிள்ளைகளின் தந்தையான மூதூர் பழநகரைச் சேர்ந்த சௌந்தரராஜா (33 வயது) என்பவரே கொலையுண்டவர் ஆவார். (ஒ-4)

## தனியான கட்டடம்

வடமராட்சி, ஜன. 6

சுகாதார அமைச்சினால் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட இரு ஜெனரேட்டர்களை பாதுகாப்பாக வைத்து பராமரிப்பதற்கென, வைத்தியசாலை வளவுக்குள் கட்டடத் திணைக்களத்தால் தனியான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. [ஐ-173]

## செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட்ட வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தில் நவீன முறைப்படி கை, கால் உறுப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியாரின் உதவியுடன் இயங்கும் இந் நிறுவனத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்று இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சபையின் தலைவராக வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன் தெரிவு செய்யப்பட்டார். [க-17]

## இந்துதர்மம் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 6

இந்து சமயப் பேரவை வெளியிடும் ''இந்து தர்மம்'' சஞ்சிகையின் நான்காவது மலர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்பு மலராக வெளியிடப் படவுள்ளது.

இந்த மலரின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் இடம் பெறும்.

விழாவுக்கு திரு. ஆ. மகாலிங்கம் தலைமை வகிப்பார். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிரதம விருந்தினராகவும், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

சஞ்சிகையின் முதற் பிரதியை அண்ணா தொழிலக அதிபர் திரு. பொ. நடராசா பெறுவார். வெளியீட்டுரையை கலாநிதி சி. க. சிற்றம்பலமும் அறிமுகவுரையை கலாநிதி சபா. ஜெயராசாவும் நிகழ்த்துவர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைப்பதற்கு இடமில்லாததால் நகரப் பகுதியில் கழிவுகள் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ். மாநகரசபைப் பகுதியில் கழிவுகள் அப்புறப்படுத்தப்படாமல் தேங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

நகரில் சேரும் கழிவுகளை புதைப்பதற்கு ஏற்ற இடம் இல்லாததாலேயே இந்நிலை உருவாகியுள்ளது.

மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கொல் களங்கள் மற்றும் யாழ். ஆஸ்பத்திரி ஆகியவற்றில் சேர்ந்துள்ள கழிவுகள் கடந்த சில தினங்களாக அகற்றப்படவில்லை. பொது இடங்களிலும் கழிவுகள் ஆங்காங்கே குவிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

யாழ். மாநகர சபையினர் கழிவுப் பொருள்களை இது வரை காலமும் காக்கைதீவுப் பகுதிக்கே அப்புறப்படுத்தி வந்தனர்.

காக்கைதீவுப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதை அப்பகுதியில் வசிக்கும் மக்கள் எதிர்த்து வருகின்றனர்.

இந்நிலையில் —

கழிவுப் பொருள்களை போடுவதற்கு ஏற்ற இடம் ஒன்றைத் தெரிவு செய்வதில் மாநகரசபை நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

நகரில் கழிவுகள் சேர்ந்துள்ளதால் சில இடங்களில் துர்நாற்றம் பரவத் தொடங்கியுள்ளது. இதனால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் உள்ளது. (ஐ-4-17)

## தமிழாராய்ச்சி மாநாடு:

# அழைப்பிதழ் முகவரியால் கருணாநிதி அதிருப்தி

சென்னை, ஜன. 6
உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கான அழைப்பிதழ் தமக்கு அனுப்பப்பட்ட விதம் குறித்து தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி அதிருப்தி தெரிவித்துள்ளார்.

தமது அழைப்பிதழில் ''முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் மு. கருணாநிதி'' என்று முகவரியிடப்பட்டிருந்ததாக அவர் கூறியுள்ளார்.

30 - 12 - 1994 மாலை அரசில் செய்தித்துறை அலுவலர் மூலம் எனது வீட்டில் அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது.

அதில் ஆங்கிலத்தில் டாக்டர் எம். கருணாநிதி முன்னாள் எம். எல். ஏ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

முன்னாள் முதலமைச்சர் அல்லது தி.மு.க தலைவர் என விலாசமிட்டு அதை அனுப்பியிருக்கலாம். இரண்டுமே இல்லை.

அதை அனுப்பியவர் ஒரு முன்னாள் நடிகை என்ற தோரணையில் முன்னாள் எம். எல். ஏ. என்று முகவரியிட்டுள்ளார். எனவே நானும் அவ்வாறே முகவரியிட்டு நன்றிக் கடிதம் அனுப்பிவிட்டேன்.

— இவ்வாறு கருணாநிதி கூறினார். (ஐ)

# அமைச்சரின் வீட்டில் பிரேமதாஸாவின் கட்டில்!

கொழும்பு, ஜன. 6
முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா ஆட்சிக் காலத்தில் அவருக்கென சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட— பலலட்ச ரூபா பெறுமதியான— ஆடம்பரக் கட்டில் ஒன்று தற்போத அமைச்சர் ஒருவரின் வீட்டில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கட்டிலை ஏலத்தில் விற்பனை செய்யவதைத் தாமதப்படுத்தி வரும் அந்த அமைச்சர் அதனைத் தமது பாவனையில் வைத்துள்ளார் என்று சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பிரேமதாஸா ஜனாதிபதியாக பதவிவகித்த காலத்தில் மிஹிந்தலையில் நடந்த ''கம்உதாவ'' கொண்டாட்டங்களின் போது அவரது தேவைக்கென இந்த ஆடம்பரக் கட்டில் விஷேடமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. (ஐ-10)

## அரசை கவிழ்க்க சதி செய்த வழக்கில்

# மல்லாகம் இளைஞர் விடுதலை செய்யப்பட்டார்!

கொழும்பு, ஜன. 6
அரசைக் கவிழ்க்க சதி செய்தார் என்ற குற்றச் சாட்டுக்கு ஆளான மல்லாகத்தைச் சேர்ந்த பாலசிங்கம் சுரேந்திரன் (உதயன்) என்ற இளைஞரை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி சி. வி. விக்கினேஸ்வரன் உத்தரவிட்டார்.

காப்பரன் வெட்ட உதவியதாகவும், இராணுவ முகாமைத் தாக்கி அனர்த்தம் விளைவித்ததாகவும் அந்த இளைஞர் மீது இரு குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

குற்றச் சாட்டுக்களை நிரூபிக்க முடியாது என்று எதிரி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ் பஞ்சாட்சரம் ஆட்சேபனை செய்தார்.

அரச சட்டத்தரணி ரியாஸ் ஹம்ஸா பதில் ஆட்சேபனை தாக்கல் செய்யாது மன்றின் முடிவுக்கே விட்டிருந்தார்.

அதனையடுத்து நீதிபதி சி. வி. விக்கினேஸ்வரன் அவரை விடுதலை செய்யுமாறு தீர்ப்பளித்தார். (ஐ)


## கேள்வி அறிவித்தல்

யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்

வெதுப்பக உரிமையாளர்களுக்கு
சுகாதார குப்பைத் தொட்டிகள் அமைத்தல்

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்க அங்கத்தவர்களின் வெதுப்பகங்களுக்கு 150 சுகாதாரக் குப்பைத் தொட்டிகள் அமைத்து வழங்குவதற்கு, கேள்விகள், குப்பைத்தொட்டிகள் அமைப்பவர்களிடமிருந்து 19-01-95காலை 10-00மணிவரை மாவட்டத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மாதிரிக் குப்பைத்தொட்டியும் அதன் அளவுகளும் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''குப்பைத்தொட்டிகள் அமைத்தல்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

திரு. ந. பாலவிநாயகர்,
மாவட்டச் செயலாளர்.
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(சி-113)



## மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| சைனா சீத்தை மீற் | — | 48-00 |
| விஸ்கோஸ் பிரின்டட் 44 அங் மீற் | — | 110/-, 115/-, 150/- |
| விஸ்கோஸ் பிளேன் 44 அங் மீற் | — | 110/- |
| J. B. சேட்டிங் L/C 44 அங் மீற் | — | 110/- |
| சூட்டிங் - லெந்த் | — | 190/-, 290/-, 390/- |
| பக்திச்சாரம் | — | 110/- |
| பிளவுஸ் | — | 125, 175 |
| ஸ்கேட் | — | 175/-, 200/- 220/-, |
| சேட் (சிறுவர்களுக்கானது) | — | 125/- |
| சோட்ஸ் ,, | — | 60/- 70/- |

மற்றும் சாறி வகைகளும் உட்பட

**06-01-95 தொடக்கம் 25-01-95 வரை**

வாடிக்கையாளரின் நன்மை கருதி நீடிக்கப்பட்டுள்ளது.

**த. குமாரசாமி** ரெக்ஸ்ரைல்ஸ்
156, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(34540)


# உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் அரசுக்கு பரீட்சைக் களமாக அமையும்

கொழும்பு, ஜன. 6
எதிர்வரும் ஜூன் மாதம் நடக்கவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் பொ. ஐ. மு. அரசின் கடந்த கால நடவடிக்கைகள் குறித்த மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளும் ஓர் பரீட்சைக் களமாக விளங்கும் என்று ''சண்டே ரைம்ஸ்'' தெரிவித்துள்ளது.

மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்களை உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களாகத் தமது கட்சி நிறுத்தவுள்ளது என ஐ. தே. க.பொதுச் செயலர் திரு.காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்.

இந்தத்தேர்தலில் போட்டியிடுவதற்காக ஏற்கனவே சுமார் ஆயிரம் பேர் தமக்கு மனுச் செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை — உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிடப் போவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்திருக்கிறது.

இந்த சூழ் நிலையில் பொ. ஐ. மு. அரசுக்கு உள்ளூராட்சித் தேர்தல்கள் பரீட்சைக் களமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## துப்பு உற்பத்தி அதிகரிப்பு!

தென்மராட்சி கோடிதல்ஸ் தும்பு கைத்தொழில் நிறுவனத்தில் கடந்த வருடம் (1994)மட்டும் ஒன்றரை லட்சம் கிலோ தும்பும் 50ஆயிரம் கிலோ கயிறும் உற்பத்தி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ-117)

## கரையொதுங்கிய சடலம்!

கொழும்பு,ஜன. 6
பேசாலை சிறுத்தோப்பு கடற்கரையோரத்தில் கடந்த வாரம் பொனிப்பாஸ் செல்வம் (வயது26) என்ற இளைஞனின் சடலம் கரையொதுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மரணத்தில் மர்மம் இருக்கலாம் என மன்னார் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ஐ)

## புலிகளின் குரல் வானொலியில்

**06 — 01 — 1995**
**வெள்ளி இரவு**

- ★ 8-01 — எங்களின் தேசம்
- ★ 8-05 நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-20 — நலந்தானா – நிகழ்ச்சியில்'சிறுபிள்ளைகளில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்'
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம் பொன் கணேச மூர்த்தி எழுதும் இலங்கை மண் 53 ஆம் அங்கம்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**07 — 01 — 1995**
**சனி காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி
**வெள்ளி மாலை ஒலிபரப்பு**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சி கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — கணநேர காவியங்கள்
- ★ 5-40 — நேயர் கடிதங்கள்
- ★ 5 45 — தமிழீழ கானங்கள்
- ★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
- ★ 6-02 — நாடகம்– க. சிவா எழுதிய ''உதுசுகம் வரும்''
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 —என் தெரிவு
- ★ 6-30 மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

# 30 பேருக்கு ஞாயிறன்று கண் சத்திர சிகிச்சை

தென்மராட்சி, ஜன. 6
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் முதல் தடவையாக தென்மராட்சி வடமராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த விழிப்பூப் படலம் (கற்றாக்) பாதிக்கப்பட்ட முப்பது பேருக்கு கண்சத்திர சிகிச்சையினை நடத்தவுள்ளனர்

நாளை மறுதினம் ஞாயிறு காலை 7-00 மணிக்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சை மண்டபத்தில் யாழ். போதனாவைத்தியசாலை கண்சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாஸன் உட்பட கண்சிகிச்சைக் குழுவினரால் சத்திரசிகிச்சை நடத்தப்படும்.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தினரின் அனுசரணையுடன் வடமராட்சியைச் சேர்ந்த பதினைந்து பேரும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் அனுசரணையுடன் பதினைந்து பேரும் இச் சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# பாடசாலை அபி. சபைகள் 2 ஆம் திகதியுடன் கலைப்பு!

அனைத்துப் பாடசாலைகளிலும் அமைக்கப்பட்டிருந்த பாடசாலை அபிவிருத்திச் சபைகள் கடந்த 2 ஆம் திகதியுடன் கலைக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

பாடசாலை அபிவிருத்திச் சபைகள் இதுவரை கையாண்டு வந்த வேலைகள் மற்றும் கணக்கு வழக்குகளை பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பொறுப்பேற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1992 ஜனவரியில் விசேட வர்த்தமானி அறிவிப்பு மூலம் பாடசாலை அபிவிருத்திச் சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. (உ)

## சகல அரச ஊழியர்களுக்கும்

# வாழ்க்கை செலவுக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்

## அமைச்சர் தர்மசிறி தகவல்

கொழும்பு, ஜன. 6
சகல அரச ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்க அரசு முடிவு செய்துள்ளதாக அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சம்பள உயர்வு குறித்து ஆராய நியமிக்கப்படவிருக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சின் பிரகாரம் சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# அரசுக்கு தாதிமார் 3 நாள் கால அவகாசம்

கொழும்பு, ஜன. 6
ஆஸ்பத்திரி தாதியர்கள் சம்பள உயர்வு உட்பட பல விடயங்களை உள்ளடக்கி தாம் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்ற அரசுக்கு மூன்று நாள் கால அவகாசம் விதித்திருக்கிறார்கள்.

இந்த கால அவகாசம் நேற்றுடன் முடிவடைய இருந்தது குறிப்பிடத்தக்கது.

தாதியரின் கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை பொது சேவைகள் தாதியர் சங்கம் கடந்த திங்களன்று அனுப்பி வைத்தது அக்கடிதத்திலேயே மூன்று நாள் (72 மணி நேர) கால அவகாசம் அரசுக்கு வழங்கப்பட்டிருந்தது.

''அரசு தொடர்ந்து எமது கோரிக்கைகளை உதாசீனம் செய்யுமானால் நாம் எமது கடைசி புகலிடமாக வேலை நிறுத்தத்தில் குறிக்க வேண்டி வரும்'' —என்று பொது சேவைகள் தாதியர் சங்கத் தலைவர் வண. முறுத்தெட்டுவேகம தேரர் தெரிவித்தார்

# சமூக விடிவுத் திட்டங்களை செயற்படுத்திய பெரியார்

## பொன்விழாவில் பாராட்டு

வதிரி, ஜன 6
சமூக விடிவிற்காகப் பல்வேறு திட்டங்களை வகுத்து அவற்றைச் செயற்படுத்துவதில் வெற்றியும் கண்டவர் பெரியார் திரு. மு.சி சீனித்தம்பி. சமுதாய அபிவிருத்தி மட்டுமின்றி, கல்வி பொருளாதாரத் துறைகளிலும் அவர் அரும் பணிகளை ஆற்றியுள்ளார்.

வதிரி அபிவிருத்தி நிறுவனஸ்தாபகத் தலைவர் திரு மு. சி.சீனித்தம்பி தம்பதிகளின் திருமணப் பொன் விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை நிகழ்த்திய அறிஞர்கள் பலரும் இவ்வாறு அவரைப் பாராட்டினார்கள்.

பொன்விழா நிகழ்ச்சிகள் வதிரி அபிவிருத்தி நிறுவனத் தலைவர் திரு.ம.செ. சபாநாயகம் தலைமையில் நடைபெற்றன.

இந் நிகழ்ச்சியில் விசேடமாக, திரு. சீனித்தம்பியால் தொடக்கி வைக்கப்பட்ட நூலகத்தின் புத்தகக் கண்காட்சி இடம்பெற்றது.

''இந்நூலகத்தில் நவீன ஆராய்ச்சிக்குத் தேவையான பல்துறை நூல்களும் உள்ளன. இவற்றைப் பயன்படுத்த வேண்டும்'' —

என்று புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவத்துறைத் தலைவர் திரு. எம். நடராஜசுந்தரம்பிள்ளை கூறினார். (க)

## பதில் பணிப்பாளராக நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் வைத்திய கலாநிதி வி. சிறிகாந்தா நியமிக்கப்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வைத்திய கலாநிதி சிறீகாந்தா யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் அலுவல்களை கவனிக்கும் அதே வேளையில் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியாகவும் கடமை புரிவார் என்று தெரிக்கப்பட்டது
(ஒ-4)

## ஷெல் தாக்குதல்

தென்மராட்சி, ஜன. 6
கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணி தொடக்கம் 10 மணி வரை வெற்றிலைக்கேணி முகாமிலிருந்து தொடர்ச்சியாக ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

## கப்பல் சேவை இல்லாததால்

# சிகிச்சை பெறச் சென்றோர் திரும்ப முடியாத நிலை!

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு சென்ற நோயாளர்கள் மீண்டும் யாழ் திரும்ப முடியாமல் பெரும் சிரமப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோயாளர் கப்பல் சேவை தடைப்பட்டுள்ளதே இதற்கு காரணமாகும்.

சிகிச்சையை முடித்துக் கொண்ட சில நோயாளர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலேயே தொடர்ந்து தங்கியுள்ளனர்.

சிலர் கிளாலியூடாக யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

நோயாளர் கப்பல் சேவை மீண்டும் எப்போது ஆரம்பமாகும் என்று எதிர்பார்த்து கொழும்பு ஆஸ்பத்திரியில் பல நோயாளர்கள் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
(ஐ-17)

# மலத்தியோன் விசுறும் வேலை மீண்டும் ஆரம்பம்!

அரியாலை, ஜன. 6
யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் மலத்தியோன் விசிறும் நடவடிக்கையை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

அரியாலை, நாவாந்துறை பகுதிகளில் மலத்தியோன் விசிறப்பட்டு வருகின்றது.

யாழ். மாநகர சுகாதர பகுதிக்கு 70 பெட்டி மலத்தியோன் வந்து சேர்ந்துள்ளது.

இதனைவிட வடிகால்கள் மற்றும் பொது இடங்களுக்கு புதிய மருந்து ஒன்றை சுகாதாரப் பகுதியினர் விசிறி வருகின்றனர். (ஐ-17)

## சிப்பாய் பலி

களுத்துறை மொரகல வாடி வீட்டுக்கு அருகில் வைத்து விசேட பொலீஸ் அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார்.

இதுதொடர்பாக சந்தேகத்தின் பேரில் சிலரை மீக தென்ன பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# எல்லோருக்கும் தலைவர் விநாயகப் பெருமான்

எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும், பிள்ளையார் சுழி போட்டுவிட்டோ, அல்லது ''சுக்லாம்பரதரம்'' குட்டிக் கொண்டோதான் ஆரம்பிக்கிறோம்.

எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் முதலில் பிள்ளையாரை வணங்கிவிட்டுத்தான் அந்த தெய்வத்தை வணங்குவோம்.

பார்வதிக்கும், பரமசிவனுக்கும் விவாகம் நடக்கிறது.

அப்பொழுது ரிஷிகள் முதலில் விநாயகர் பூஜை செய்யுங்கள் என்று சொல்ல, பார்வதியும், பரமசிவனும் விநாயகர் பூஜை செய்கின்றனர் என்று கூறுகின்றார் துளசிதாசர்!

இது என்ன வேடிக்கை! பெற்றோர்களுக்கே இப்பொழுதுதான் விவாகம் நடக்கிறது. அதற்குள் அவர்கள் மகன் விநாயகர் எங்கிருந்து வந்தார்! என்று நீங்கள் கேட்கலாம்.

ஆனால் தத்துவம் என்னவென்றால், பார்வதி, பரமசிவன், விநாயகர் மூவருமே அனாதி.

ஏதோ ஒரு அவதாரத்தில் பார்வதி, பரமேசுவரன் வருகிறார்கள்.

விநாயகர் என்றாலே, தலைவர் இல்லாதவர், அதாவது எல்லாருக்கும் தலைவர் என்று பொருள்.

அவர் பிரணவத்தின் சொருபமானதால் அப்படி அழைக்கப்பட்டார்.

விநாயகரை வணங்கினால் அவர் விக்கினங்களைத் தடுப்பார். வணங்காவிட்டால் விக்கினங்களைக் கொடுப்பார்.

இதில் அவர் பாரபட்சம் காட்டுவது கிடையாது.

திரிபுரத்தை எரிக்கச் சென்ற சிவன் விநாயகரை மறந்தார். அதனால் சிவனுடைய தேரின் அச்சு முறிந்தது.

பிறகு அவர் விநாயகரை நினைத்த பிறகு தான் தேர் சரியாயிற்று.

அதே மாதிரி வள்ளியை மணம் புரியச் சென்ற முருகன் விநாயகரை மறந்தான். அதனால் அவனுடைய நோக்கம் நிறைவேறவில்லை. முருகன் கணபதியை வேண்டிக் கொண்ட பிறகுதான் அவனுடைய காரியம் கைகூடிற்று.

விநாயகருக்கு ஏன் முதல் பூஜை! யாருக்கு முதல் பூஜை செய்யவேண்டும் என்கிற பிரச்சினையைத் தேவர்களால் தீர்க்க முடியவில்லை.

அவர்கள் சிவனை யோசனை கேட்டார்கள். ''எல்லாரும் உங்கள் வாகனங்களில் அமர்ந்து இந்தப் புவனத்தைச் சுற்றி வாருங்கள். யார் முதலில் வருகிறார்களோ அவர்களுக்கு முதல் பூஜை'' என்று சொன்னார் சிவன்.

எல்லாத் தேவர்களும் தங்கள் தங்கள் வாகனங்களில் கிளம்பினார்கள்.

ஆனால் மூஞ்சூறை வாகனமாகக் கொண்ட விநாயகர் என்ன செய்வார்! ஆகவே

## ஞானக்கதிர்

சிவனை வலம் வந்தார். சிவனுக்குள் அகில பிரபஞ்சமும் அடக்கம் என்பது அவருக்குத் தெரியும். தன் புத்தியைக் கொண்டு அவர் ஜெயித்தார்.

விநாயகரை எதற்காக வணங்கினாலும் வணங்காவிட்டாலும், ஐந்தாவது வேதம் என்று கருதப்படும் மகாபாரதத்தை தன் தந்தத்தை உடைத்து எழுதிக் கொடுத்தாரே அதற்காக அவரை வணங்கவேண்டும்.

நான் சொல்லும் வேகத்துக்கு உம்மால் எழுதிட முடியுமா? என்று கேட்ட வியாசரை.

'நான் எழுதும் வேகத்துக்கு உம்மால் சொல்ல முடியுமா? என்று கேட்ட விநாயகரை நாம் என்றும் வணங்குவோமாக!

— நாடோடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் கிறைண்டிங் மில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: குணா மில், அல்லையம்பதி, துன்னாலை தெற்கு, துன்னாலை. [7849]

### FLASH TUBE

1½ அங்குல, 2 அங்குல Flash Tubes உடன் விற்பனைக்குண்டு. கே.எஸ் ஆர். போட்டோஸ், இல. 766, கே. கே. எஸ். வீதி, தட்டாதெருச் சந்தி. [34535]

### MATHS

ஆண்டு 5லிருந்து O/Lவரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்திப் புள்ளியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 28வருட அனுபவமுடைய ஆசிரியரினால் குறைந்த காலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [8183]

### இலகு திருமண சேவை

38 வயது, ரேவதி, செவ்வாயற்ற U. K.இல் தொழில் புரியும் மணமகனுக்கு மணப்பெண் U.K.இல் அல்லது அனுப்பக் கூடியவர் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ் நாச்சிமார் கோயிலடி. [34532]

### ரி. வி., டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள் ரி. வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி-254]

### யாருடையது?

திருநெல்வேலி சந்திக்கு அருகில் ஆண்களுக்குரிய துவிச்சக்கரவண்டி திருநெல்வேலி வர்த்தகர் பாதுகாப்பு சேவையினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்: வர்த்தகர் பாதுகாப்பு சேவை, திருநெல்வேலி. [34537]

### ஓடர்கள் கவனிக்கப்படும்

சிறுவர் பெரியோர்களுக்கான றெடிமேட் ஆடைகள் மற்றும் சாறி பிளவுஸ், ஆண்களுக்கான ரவுஸர் ஷேர்ட் பெண்களுக்கான பாட்டி பிறக் ஆகியவற்றை குறித்த தவணையில் தைத்து பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சலுகை விலைகள் தொடர்பு: சிற்றி காமன்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி. கிளை: சிவபதி, இணுவில். [சி-74]

### அப்பியாசக்கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி [வெலிங்டன் சந்திக்கு அருகில்], யாழ்ப்பாணம் [சி-255]

## 'A' LEVEL CENTRE

Ist, LANE,
POINT - PEDRO,
JAFFNA.

மீட்டல் வகுப்பு

ஆரம்பம்:
**07-01-1995**
SAT. & SUN.

CHE. — Mr Nagaratnam
PHY — Mr Jeyaseelan
APP /PURE — Mr. Nithiyananthan
ZOO. — Mr. Gananenthiran
BOT. — பிரபல ஆசிரியர்

(சி-260)

## 41-ம் நாள் நினைவஞ்சலி



**செல்வன் ப மனோகரராஜா**

மலர்வு: 07 — 04 — 1971
உதிர்வு: 27 — 11 — 1994

எங்கள் அன்புச் செல்வா!
அன்பின் பிறப்பிடமே
அரவணைப்பின் உறைவிடமே
அயராது உழைத்து விட்டு
ஆண்டவனைச் சேர்ந்தாயோ!
கடமை வீரனாகத் திகழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்தீரே!
எம்மைவிட்டு பிரிந்தாலும்
உமது நினைவு என்றும் எங்களை மறவாது.

உம் பிரிவால் துயருறும்,
தாய், தந்தை, அண்ணாமார்,
அக்காமார், தம்பி, அத்தான்,
மச்சான்மார், மருமக்கள்,
பெறாமக்கள்.

தாவடி தெற்கு,
கொக்குவில். (34528)

## விசேட ஆங்கில மொழி கற்கை நெறி

## SPECIAL ENGLISH

- ✶ For School-Leavers; University & Technical Students & Officers
- ✶ A Comprehensive Course
- ✶ Course Covers requirements of N. C. E. TOEFL., E. L. T., & English Teachers Selection Examinations.
- ★ Commences on **07-01-1995**
  SAT பி. ப. 2 மணி

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்
(SAT SUN. - 2.30)

For details, Contact:
Director,
**NEW SCIENCE HALL**
Kannathiddi, Jaffna
(சி/10139)

## பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில் மார்கழி மாத
# ★ 3-ம் திருவிழா விஞ்ஞாபனம் ★

மேட்டருகில் பேய்ந்துவரும் விட்டவரின் காட்டுமாடு
பாட்டு வரும் திசைநோக்கிப் பாய்ந்தோடும்
நல்ல வீட்டருகில் விளையாடும் வெள்ளை நிறக் கன்றுகளும்
பிள்ளையிவன் பின்னோடித் திண்ணை வரும்
கண்ணனவன் வெண்ணைமுட்டி களவாடித் தின்னும் உறி
கட்டிவைக்கும் கட்டிடங்கள் காட்சி தரும்
இது காட்சியும், ஆட்சியும் கலந்தெம்மை வாழ வைக்கும்
கண்ணாளன் கண்ணனின் பொன்னாலைக் கோயில்.

ஆக்கியோன்: மூளாயூர் ஆசிரி. செ. சுப்பிரமணியம்

(34506)

# WANTED

## CHUNDIKULI GIRL'S COLLEGE
### JAFFNA

**A GRADUATE TO TEACH**

1. Chemistry & Botany
2. English

For Advanced Level Classes.

★ APPLY BEFORE 13th JANUARY 1995

— **PRINCIPAL.**

(C-115)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 23 — 07 — 1936



ஆண்டவன் அடியில்: 29 — 12 — 1992

**திருமதி சி. புவனசுந்தரி**

திதி: 06 — 01 — 1995

ஆறாத ஓடியது ஆண்டு இரண்டு
ஆனாலும் அணையாது எம் மனதில்
ஒளியாய் திகழ்ந்திடுவாய் அம்மா!
என்றும் உங்கள் அன்பு எம்மிடையே -
உள்ள வரைக்கும்.

உங்கள் இழப்பால் துயருறும்;
பிள்ளைகள், பேர்த்தி,
மருமக்கள்.

"தங்கஸ்தான்"
கோப்பாய்,
இருபாலை. (34513)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இராமலிங்கம் சின்னத்தம்பி**
(வெலிமடைச் சின்னத்தம்பி)
(முன்னை நாள் இந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், வெலிமடை)

தோற்றம்: 15-04-1912
மறைவு: 18-12-1993

திதி: 06-01-1995

எங்கள் குலவிளக்கே! வழிகாட்டியே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு
ஒன்று சென்றதாயினும் தங்கள் அன்பு
கலந்த வழிகாட்டலையோ, கண்டிப்பும்
ஆசாரமும் நிறைந்த வாழ்க்கை முறையையோ
நாம் என்றும் மறவோம் தாங்கள் அல்லும்
பகலும் வழிகாட்ட நல்லூர்க் கந்தன்
திருவடி நிழலில் தாங்கள் பேரானந்தப்
பெருவாழ்வு பொருந்தியிருக்க இறைஞ்சும்;

மனைவி, மக்கள்
சகோதரன், குடும்பத்தினர்.

"லக்சுமி வாசா"
... கிழக்கு,
... (34524)

## கட்டுடை அரசடி விநாயகர் ஆலயம் மானிப்பாய் மேற்கு
# தேர் வர்ணம் பூசல்

மேற்படி ஆலய தேருக்கு வர்ணம் பூச கேள்விப் பத்திரம் கோரப்படுகிறது.

1. பொருள்கள் + கூலி
2. கூலி மட்டும்

இதற்கு அமைய கேள்விப் பத்திரங்களை **15 — 01 — 1995** க்கு முன் அனுப்பி வைக்கவும்.

இ. பத்மநாதன்,
தலைவர்,
ஆலய வழிபடுவோர் சங்கம்,

(34541)

## பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து), பருத்தித்துறை

# குபேட்டா இரு சில்லு உழவு இயந்திரத்தின் கலப்பை (புதிது) விற்பனை

எமது சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்ட குபேட்டா ரக இரு சில்லு உழவு இயந்திரக் கலப்பை ஒன்று ரூபா 17,500/-இற்கு விற்பனைக்குண்டு. எனவே இதனைப் பெற விரும்புவோர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், தம்பசெட்டி றோட், பருத்தித்துறை.

— தலைவர்.

பருத்தித்துறை, ப.நோ.கூ. சங்கம்,
பருத்தித்துறை. (சி-114)

THE EXPRESS INSTITUTE KOPAY — A BOON TO STUDENTS

## கல்வி ஆண்டு 1995 வகுப்புகள்

## ஜனவரி 7-ல் ஆரம்பம்

- ★ வழமையான தனித்துவமான ஆசிரியர் குழுவுடன் மேலும் சில சிறப்பு விரிவுரையாளர்களின் சேவைகள்.
- ★ மாணவர் இலகுவாக கற்பதற்கு ஏற்ப குறைந்த எண்ணிக்கை கொண்ட பல பிரிவுகளாக வகுப்புகள்.
- ★ மாதாந்த பரீட்சைகளும், மீட்டல் வினா-விடை வகுப்புகளும்.
- ★ ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த மாணவர் குழுவில் நீங்களும் ஓர் அங்கமாக ஜனவரி 14 வரை சந்தர்ப்பம் வழங்குகிறோம்.

— அதிபர்.

[34533]

## 2ஆம் ஆண்டு நினைவில்

தாயின் கையில்: 09 — 06 — 1974



தாயின் கனவில்: 16 — 01 — 1993

**கந்தையா பிரேமதாசன்**

உன்னை சாவு அன்று அணைக்க வேண்டும்
நாம் என்றும் கண்ணீரில் நனைய வேண்டும்
உன் நினைவுகள் என்றும் எம் நெஞ்சங்களில்-
நிலைக்க வேண்டும்
இதுதான் ஆண்டவன் தீர்ப்போ பிரேமா?
பிரேமனே சாந்தி உன் ஆத்மா சாந்தி.

— குடும்பத்தினர்.

"நன்னீஸ்",
தாயகம்,
காங்கேசன்துறை. [34539]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி

யாழ்ப்பாணம்


## அரசாங்கம் எங்கே நிற்கிறது

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதற்கும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரண்டு தடவைகள் பேச்சு வார்த்தைகளும் நடந்திருக்கின்றன.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதிலும், தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதிலும் இப்போது கவனம் செலுத்தப் படுகிறது. அவை செயலுருப் பெறும் போதே இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து ஆராய்வது என்பதே ஏற்பாடாகும்.

இத்தகைய ஒரு நிலையில் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்னா தெரிவித்திருக்கும் கருத்து கவனத்தில் கொள்ளக்கூடியது.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு பூரண தன்னாட்சி அதிகாரங்களை வழங்கும் தீர்வு ஒன்றே உகந்தது என்ற கருத்தை அவர் வலியுறுத்தி இருக்கிறார்.

அரசாங்கம் உரிய, உகந்த தீர்வை முன்வைக்காது, இறுதியில் போரின் மூலமே தீர்வுகாண நினைக்குமானால், அது தனக்குத் தானே கல்லறை அமைப்பதற்கு ஒப்பானதாகும் என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

இத்தனைக்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தனக்கு ஆர்வமும், அக்கறையும் உள்ளதாகக் கூறிக்கொள்ளும் புதிய அரசாங்கம், தன்வசம் உள்ள உத்தேச தீர்வு என்ன என்று இன்னும் அறிவிக்கவில்லை!

தமது கௌரவத்தையும், சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்யும் தீர்வு ஒன்றையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இன்னும் விரித்துக் கூறுவதானால், வரலாற்று ரீதியாகத் தங்களுக்குச் சொந்தமான தாயக மண்ணில், சுதந்திரமாக, கௌரவமாக, நிம்மதியாக பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதே அவர்களின் அபிலாசை.

அவர்களின் இந்த அபிலாசையை நிறைவேற்றக் கூடிய தீர்வு ஒன்றே இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமைய முடியும்.

இந்தப் பின்னணியில், அரசாங்கம் தன்னால் வழங்கக் கூடிய தீர்வு என்ன என்று இன்னும் முடிவு செய்யவில்லை. அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் சமஷ்டித் தீர்வை தாங்கள் முன்வைக்கப் போவதில்லை என்பதனை மறைமுகமாகக் கூறியிருக்கிறார். அதாவது பௌத்த பீடாதிபதிகளைச் சந்தித்தபோது சமஷ்டி முறையை அரசு ஆதரிக்காது என்று தெரிவித்திருக்கிறார்.

தமிழர்களுக்கு ஓரளவு தன்னாட்சி உரிமை வழங்கக்கூடியதாக அமைந்த பண்டா—செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்த ஜே. ஆர்., தமிழர் பிரச்சினையை பயங்கரவாதம் என்று காட்டிய ஜே. ஆர். இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையே உகந்த தீர்வு என்று இப்போது கூறுகிறார்!

இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டும் என்ற விருப்பம் சிங்கள மக்களிடையே துளிர்த்துவிட்ட போதிலும், என்ன தீர்வை முன்வைப்பது என்பதனை தெற்கின் அரசியல் தலைவர்களால் முடிவு செய்யமுடியவில்லை. இந்தக் காட்சி மிகத் தெளிவாகவே தெரிகிறது.

இந்த நிலை மாறவேண்டும்; உடனடியாக நீக்கப்படுவது அவசியம். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற அமோக ஆணையைப் பெற்ற அரசாங்கத்தினாலேயே, தமிழர்களுக்கு உகந்த, நியாயமான தீர்வை வகுக்க முடியவில்லையானால் இனி எப்போதும் தீர்வு ஒன்றை எட்ட முடியாமற்போய்விடும்! உண்மையிலே சிங்களத் தலைவர்களுக்கு இது கடைசி பஸ்! இதனையும் தவறவிட்டால் பாதிப்பு அவர்களுக்காகத் தான் இருக்கும்!

எனவே இது விடயத்தில் சந்திரிகா அரசு மிக அவதானமாகச் செயற்படுவது அவசியம். இதுவிடயத்தில் அரசாங்கம் எங்கே நிற்கிறது என்பதனை மக்கள் அறிந்து கொள்வது அவசியம்.

## வொய்ஸ் ஒவ் அமெரிக்கா நிலையம் மீது தாக்குதல்!

புத்தளம் மாவட்டம் இரணவிலவில் அமைக்கப்பட்டு வரும் அமெரிக்க ஒலிபரப்பு (வொய்ஸ் ஒவ் அமெரிக்கா) நிலையத்தின் மீது கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் கூட்டம் ஒன்று தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலினால் வானொலி நிலையம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

நிலையத்துக்குச் சொந்தமான இரண்டு வாகனங்களும், மின்மாற்றியும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நடைபெற்ற போது மூன்று பொலிஸாரும், ஏழு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் மட்டுமே அங்கு கடமையில் இருந்தனர் என்றும்—

நிராயுதபாணிகளாக இருந்த அவர்களினால்மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாதுபோனதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தை அடுத்து வானொலி நிலையப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இரணவில பகுதியில் அமெரிக்க வானொலி நிலையம் அமைக்கப்படுவதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவந்ததை அடுத்து அதன் கட்டட நிர்மான வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ)

## புதியவகை மருந்தால் மலேரியா கட்டுப்பாட்டில்

கொழும்பு, ஜன. 6

மலேரியா நோயாளருக்கு புதியவகை மருந்துகள் கொடுக்கப்படுவதால், மலேரியா கட்டுப்பாட்டில் கொண்வரப்பட்டுள்ளது.

''குளோர குயின்'' மருந்துக்குப்பதிலாக ''சல்படொக்ஸ் பரிபெத்தாமின்'' மருந்தை கொடுக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

மலேரியாத் தடுப்பு இயக்கப் பணிப்பாளர் டாக்டர் புன்சிரி பெர்னான்டோ இது பற்றி தெரிவிக்கையில்—

மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 30 சதவீதமானவர்கள் இந்தநோய்க்கு கொடுக்கப்படும் மருந்தினால் குணமடைவதில்லை என்று சுகாதாரத் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது— என்றார்.

நுளம்புக் கொல்லி மருந்து அடிக்கப்பட்ட நுளம்பு வலைகளை பயன்படுத்துவதன் மூலம் மலேரியா நோய் ஏற்படுவதை சிறந்த முறையில் தடுத்துக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக் கழக மலேரியா நோய் ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த எச். ஏ. அல்விஸ் தெரிவித்த தகவலில் சோர்வு, நீண்டகாய்ச்சல், இரத்த சோகை என்பன மலேரியாவுக்கான அறிகுறியாகும் என்று கூறினார். (ஒ-3)

### புலனாய்வுப் பிரிவின் எச்சரிக்கையை அடுத்து

# ரணில், அனுருத்தவின் பாதுகாப்பை மேலும் தீவிரப்படுத்துமாறு சிபார்சு

கொழும்பு, ஜன. 6

விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் படையணி கொழும்புக்குள் நடமாடியதாக புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து—

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்தரத்வத்தையினதும் பாதுகாப்பை மேலும் தீவிரப்படுத்தும்படி புலனாய்வு அதிகாரிகள் அரசாங்கத்தைக் கோரியிருக்கின்றனர்.

புதுவருட வேளையில் கொழும்பு தெஹிவளையில் வைத்து ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதித் தலைவர் கரவைக் கந்தசாமி சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து, இத்தகைய கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக புலனாய்வுப் பிரிவின் உயர் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''த ஐலண்ட்'' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்கவும், அனுருத்த ரத்வத்தையும் கொழும்பில் ஊடுருவியுள்ள புலிகளின் தற்கொலைப் படையின் இலக்காகக் கூடும் என இந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

மேற்படி இருவரினதும் பாதுகாப்பு ஏற்கனவே ஓரளவு தீவிரப்படுத்தப்பட்டு விட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று நடைபெறும் நாடாளுமன்ற கூட்டத் தொடரின் ஆரம்ப வைபவத்தில் பங்குபற்ற ரணிலும், அனுருத்த ரத்வத்தையும் செல்லும் போது அவர்களுக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி, ஜன. 6

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கருத்தரங்கு இன்று வெள்ளி பிற்பகல் 2மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பாடசாலைகளின் அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-117]

### கைதடியில் அகதிகள் தங்கியிருந்த

## அரசினர் பாடசாலை மீண்டும் இயங்குகிறது!

கைதடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை கடந்த திங்களன்று பிற்பகல் 1 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இப் பாடசாலை கடந்த பல வருடங்களாக மூடப்பட்டு இடம் பெயர்ந்தோர் முகாமாக இயங்கி வந்தது.

திறப்பு விழா நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை மாணவர் அமைப்பைச் சேர்ந்த திரு. முருகன் ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடியை தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் ஏற்றி வைத்தார். பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி கலந்து கொண்டார்.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன், தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. அருண் மாஸ்டர், தென்மராட்சி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த திரு. கணேசன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். [ஐ-31]

## ப. நோ. கூ. ச இயக்குநர் சபை தேர்தல்

வடமராட்சி, ஜன. 6

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கான புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இம்மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ-173)

## பிரதேச செயலர் பதில் கடமை

தென்மராட்சி, ஜன. 6

தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பரீட்சை சஒன்றுக்கா கொழும்பு சென்றுள்ளதால் கோப்பாய் பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் தென்மராட்சி பதில் பிரதேச செயலராக கடமையாற்றி வருகிறார். [ஐ-117]

# கல்வித்துறையில் பல சீர்திருத்தங்களை கொண்டு வருவதற்கு புதிய அரசு முயற்சி

### கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தகவல்

கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான'யுக்திய'சிங்கள வார இதழுக்கு அளித்த பேட்டியின் தமிழாக்கம் இது.

கேள்வி: கடந்த மூன்று மாதங்களாக பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் கல்வி, உயர்கல்வி அமைச்சர் என்ற வகையில் நீங்கள் நிறைவேற்றியுள்ள வேலைத்திட்டங்கள் எவை?

பதில்: கடந்த 3மாதகாலத்தில் கல்வி அமைச்சில் நிலவிய ஊழல்களையும் சீர்கேடுகளையும் ஒழிப்பதில் ஈடுபட்டேன்.

அதிகாரத்திலுள்ள அரசுகள் மாற மாற நாட்டின் கல்வித் திட்டங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையைப்போக்க நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய கல்வித் திட்டத்தைத் தற்போது உருவாக்கப்பட்டுள்ள தேசிய கல்வி ஆணைக் குழு மூலம் தயாரிக்க எண்ணுகிறோம். அரசாங்கங்கள் மாறினும், மாறாத ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும்.

நாட்டின் எதிர்காலத்திற்குப் பொருத்தமான விதத்தில் பாடநெறிகளில் மாற்றம் கொண்டுவர கடும் முயற்சி எடுத்து வருகிறோம். வரலாறு, இலக்கியம் போன்ற பாடங்களுக்கு பாடத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை குறித்து பல கல்விமான்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இவற்றைக் கருத்திற்கொண்டு மாணவர்களின் உள்ளங்களைக் கவரும் விதத்தில் இவ்வாண்டு முதல் கேள்வித் தாள்களைத் சயாரிக்கவுள்ளோம். இப்புலமைப் பரிசில் பரீட்சையை ரத்துச்செய்வது எமது நோக்கமல்ல. ஏனெனில் இந்தப் பரீட்சையே கஷ்டப்பிரதேசங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சிறந்த பாடசாலைகளில் சேர்வதற்கான ஒரேயொரு வழியாகும்.

#### நூலகசேவை புனரமைப்பு

தேசிய நூலகச் சேவைச் சபையை புனரமைத்து புதிய ஒரு பணிப்பாளரின் கீழ் மேலும் பயனுள்ள விதத்தில் பாடசாலை நூல்களை முன்னேற்ற எண்ணியுள்ளோம்.

ஆசிரியர் சேவையை உருவாக்கியதன் மூலம் சுமார் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இந்த ஜனவரி மாதம் முதல் சம்பள அதிகரிப்பை வழங்குவதென கடந்த ஒக்டோபர் மாதத்திலேயே அதிவிசேட வர்த்தமானியில் கட்டளையைப் பிரசுரித்திருந்தோம். அந்த வர்த்தமானி அறிவிப்பில் ஆசிரியர்களின் வகுப்புக்கள், தரங்கள் குறிப்பிட்டுள்ளன. இருப்பினும் ஒரு வகுப்பில் இருந்து அடுத்த வகுப்பிற்கு செல்ல அவசியமான தகுதி பற்றி அதில் குறிப்பிடவில்லை. அது பற்றிய அறிவிப்பு இன்னும் சில தினங்களில் வெளியிடப்படும்

கேள்வி: புதிய சம்பள அதிகரிப்பின்போது ஆசிரியர்களின் சேவைக் காலமே கவனத்தில் எடுக்கப்படுகின்றது. இந்நிலையில் ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட வெளிவாரிக் கல்வித் தகைமைகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாதா?

பதில்: ஒரு [illegible] இன்னோர் தரத்திற்கு உயர்த்தப்படும்போது மேலதிக வெளிவாரித் தகைமைகளைக் கவனத்தில் எடுக்கும் விதத்தில் தற்போது திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஒருதரத்திலிருந்து மற்றைய தரங்களுக்கு பதவி உயர்வு பெறும்போது சேவைக்காலம், கல்வித் தகைமைகள், வெளிவாரி விசேட தகைமைகள் ஆகியன கவனத்தில் எடுக்கப்படும். இந்த நடைமுறை அனுசரிக்கப்படும்போது அதிக தகைமை உடையவர்களுக்கு விரைவில் முன்னேற வாய்ப்புக்கள் உள்ளன. இதுவே நியாயமான ஓர் ஒழுங்காகும். வெளிவாரித் தகைமைகளைப் பெற்றவர்களையும் அவ்வாறான தகைமைகளைப் பெறாதவர்களையும் ஒரே அடிப்படையில் கவனத்தில்கொள்ள முடியாது. இத்திட்டங்கள் அனைத்தையும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

#### ஆசிரிய பயிற்சி

கேள்வி: மேற்கு நாடுகளின் அ :ப்படையில் அமைந்த— துரதிர்ஷ்டவசமான— ஆசிரியர் பயிற்சி முறை வெற்றியளிக்கவில்லை எனப்பரவலாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இது தொடர்பாக நீங்கள் அனுசரிக்கும் நடைவடிக்கை என்ன?

பதில்: துரதிர்ஷ்டவசமானது: ஆசிரியர் பயிற்சிமாத்திரமல்ல, சகல பயிற்சிகள் தொடர்பாகவும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன, எனவே ஆசிரிய பயிற்சிகள் தொடர்பாக முற்றிலுமான மாற்றங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். ஆசிரியர் ஒருவருக்கு ஒரு தடவை பயிற்சி வழங்கப்பட்டால் மீண்டும் வேறு பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. எனவே சகல பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் ஆகக் குறைந்தது ஒருமாத வதிவிடப் பயிற்சி வழங்க எதிர்பார்க்கிறோம்.

நவீன கற்பிக்கும் முறை, கல்வித்துறை தொடர்பான நவீன கண்டுபிடிப்புக்கள், மனோதத்துவம், நவீன அடிப்படை நோக்கங்கள் ஆகிய விடயங்களில் ஆசிரியர்களுக்கு அறிவைப்புகட்ட எண்ணயுள்ளோம்.

அவ்வாறே ஆங்கில மொழியைப் போதிக்கும் முறையில் மாற்றங்களை மேற் கொள்ள [illegible] ஆண்டிலிருந்து கிராமப் புறப் [illegible] தொலைக்காட்சிப் பெட்டிகள் வீடியோ கசெட்டுக்கள் ஆகியன வற்றை வழங்கவுள்ளோம்.

கேள்வி: பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு நியமனம் கிடைக்க சுமார் ஆறு மாதம் வரை காலதாமதம் ஏற்படுகிறது. இந் நிலையைப் போக்க ஏதாவது ஒரு தீர்வு தங்களிடம் உள்ளதா?

பதில்: இந்தக் காலதாமதத்தைக் குறைக்க நான் திட்டமொன்றைத் தயாரித்துள்ளேன் பரீட்சை முடிவுகள் வெளியான பின்னர் முடிந்தளவு விரைவாக நியமனம் வழங்கவுள்ளோம்.

#### இடமாற்ற சபை

கேள்வி: இதுவரை செயல் முறையில் இருந்து வந்துள்ள ஆசிரியர் இடமாற்ற சபை முறையை தொடர்ந்தும் நீடிக்க நீங்கள் எண்ணுகிறீர்களா?

பதில்: அரசியல் சட்டத்தின் 13ஆவது திருத்தத்திற்கமைய ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது, இருப்பினும் ஒரு தேசியக் கொள்கையாக சகல பிரதேசங்களிலும் ஆசிரியர்களின் இடமாற்ற சபையை ஆசிரியர்களின் தொழிற் சங்கங்களின் பிரதிநிதித்துவத்திற்கமைய அமைப்பதென நாங்கள் தீர்மானித்துள்ளோம் அச்சபையின் மூலம் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுமாயின் அது நீதியான, யதார்த்மான ஒன்றாக அமையும் என்பது எனது எண்ணமாகும்.

ஆசிரியர்களுக்கான இடமாற்ற''களை கல்வி அமைச்சின் அதிகாரிகளும் மாகாண சபையும் மேற்கொள்வதால் ஆசிரியர்களுக்கும் அதே நோத்தில் மாணவர்களுக்கும் அநீதி இழைக்கப்படுகிறது.

தென் மாகாணத்தில் 4 ஆயிரம் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர். ஆனால் மற்றைய பல மாகாணங்களில் போதிய ஆசிரியர்கள் இல்லை எனவே ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது மாணவர்களின் கல்விக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஆனால் இதுவரை மாணவர்களின் நலன் கனோ ஆசிரியர்களின் நலன் [illegible] கவனத்தில் கொள்ளப்படவில்லை.

நான் அண்மையில் பல பாடசாலைகளுக்குச் சென்றிருந்தேன். பல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்படாமலிருந்ததை அவதானித்தேன். அதே நேரத்தில் அப்பிராந்தியங்களில் உள்ள நகர்ப்புறப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர். இதுதான் உண்மையான நிலை. இலங்கையில் ஆசிரியர் பற்றாக்குறையில்லை. ஆனால் உரிய முறையில் அவர்கள் பாடசாலைகளுடன் இணைக்கப்படவில்லை.

#### பிள்ளைகளைச் சேர்க்க பணம் அறவிடலாமா?

கேள்வி: பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது பணம் அறவிடப்படும் முறை முன்னர் இருந்து வந்ததே!

பதில்: ஆம். அது உண்மையே. பாடசாலையில் ஒரு பிள்ளையைச் சேர்க்கு முன்னர் அகற்க. இகற்கு என வற்புறுத்திப் பணம் அறவிட எந்தக் கல்லூரி அதிபருக்கும் உரிமையில்லை. இந் நிலைமையை போக்க ஒரே நாளில் என்னால் முடியாது இருப்பினும் படிப்படியாக நான் நடவடிக்கை எடுத்து வருகிறேன் ஏன் அவ்வாறு செய்கிறார்கள்? இதனால் இலவசக் கல்வி என்பதில் அர்த்தமில்லையே. எனவே கடுமையான விதிமுறைகளை அமுல் படுத்தி இந்த நிலைமையைப் போக்கவுள்ளேன். தங்களது வீடுகளுக்கு அண்மையிலுள்ள உயர்தரப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு இடம் கிடைக்காமற் போவது இதனாலேயே ஆகும்.

கேள்வி: வசிப்பிடங்களுக்கமைய பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கும் போது ஊழல்கள் நிலவுகிறது. இந்நிலையைத் தவிர்க்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளீர்கள்?

பதில்: வசிப்பிடங்களின் அடிப்படையில் பிள்ளைகளைப்பாடசாலைகளுக்கு அனுமதிக்கும்போது ஊழல்கள் இடம்பெறுகிறது என்பதை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்கிறேன். சில சந்தர்ப்பங்களில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பிள்ளை பிறந்ததாக விலாசம், மின்சாரப் பற்றுச்சீட்டு, வங்கிக் கணக்கு, நீர் வரித்துண்டு போன்ற ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு ஊழல்கள் நடைபெறுகிறது. எவ்வாறாயினும் ஏழைப்பிள்ளைகளுக்கு இப் பாடசாலைகளில் அனுமதி பெற வாய்ப்பளிக்கப்பட வேண்டும். கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களுக்கமைய மாணவர்களை பாடசாலைக்கு அனுமதிக்கும் போது எந்த ஒரு அதிபரும் பணம் தருமாறு கோரவோ அன்பளிப்பு வழங்குமாறு கோரவோ உரிமையில்லை

பாடசாலை ஒன்றில் இன்னும் பெட்டியிலிருந்து உடைக்காத புத்தம் புதிய குளிர்சாதனப்பெட்டி ஒன்று இருப்பதை நான் அறிவேன். இது மாணவர்களை பாடசாலையில் அனுமதிக்க வழங்கப்பட்ட அன்பளிப்பாகும். பாடசாலைகளை ஒருபோதும் ஏலவிற்பனை நிலையங்களாக மாற அனுமதிக்க முடியாது. பாடசாலைகள் நியாயமான, நீதியான நிறுவனங்களாக விளங்கவேண்டும். (உ-10)

> அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தத்திற்கமைய ஆசிரியர்களின் மாற்றங்கள் தொடர்பான அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் ஒரு தேசியக் கொள்கையாக சகல பிரதேசங்களிலும் ஆசிரியர்களின் இடமாற்றச் சபையை ஆசிரியர்களின் தொழிற்சங்கங்களின் பிரதிநித்துவத்திற்கமைய அமைப்பதென நாங்கள் தீர்மானித்துள்ளோம். அச்சபையின் மூலம் ஆசிரியர்களுககு இடமாற்றம் வழங்கப்படுமாயின் அது நீதியான, யதார்த்தமான ஒன்றாக அமையும் என்பது எமது எண்ணமாகும். ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களை கல்வி அமைச்சின் அதிகாரிகளும், மாகாணசபையும் மேற்கொள்வதால் ஆசிரியர்களுக்கும் அதே நேரத்தில் மாணவர்களுக்கும் அநீதி இழைக்கப்படுகிறது.

- அரசு மாறும் போது கல்வித் திட்டமும் மாறும் முறையைப் போக்குவோம்.
- 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முறையில் மாற்றம் கொண்டு வரப்படும்.
- ஆசிரிய பதவி உயர்வுகளின்போது சேவைக்காலத்துடன் கல்வித் தகைமையும் கணிக்கப்படும்.
- ஆசிரிய பயிற்சி முறையில் மாற்றம் வரும். பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மீண்டும் பயிற்சி வழங்கப்படும்.
- ஆங்கில கல்விப் போதனை முறையும் மாற்றியமைக்கப்படும்.
- ஆசிரிய இடமாற்ற முறையில் நீதி பேணப்படுவதை உறுதி செய்வோம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா பாலசிங்கம்

உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஏழாலை மேற்கை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான தம்பையா பாலசிங்கம் நேற்றுச் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், ராசகோபால் (அவுஸ்திரேலியா), அகிலேஸ்வரன் (சுவிஸ்), கருணாதேவி, ரஞ்சனாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தேவகி, ஜெயலட்சுமி, யோகராசா, காளிதாசப்புலவர் ஆகியோரின் மாமனாரும், அனுரதன், அனுசியா, அனுலா, அனுதீபன், துஷ்யந்தன், ஜெயக்கணேஸ், அனுஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

சிலும்பிலாட்டி,
ஏழாலை மேற்கு. (34550)

## நாகநாதபிள்ளை சங்கரலிங்கம்

(கொழும்பு முன்னைநாள் வர்த்தகர் - சரவணை)

சரவணை கிழக்கு, பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சோளாவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆகிய நாகநாதபிள்ளை சங்கரலிங்கம் 03-01-1995 இல் கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகநாதபிள்ளை - இராசம்மாவின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் (தேவி) அன்புக் கணவரும், அம்பலவாணர் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், யாழினி, சர்மிலா, சுபரேகா, லாவண்ஜன், பிரதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவமணி, கமலாம்பிகை, சரஸ்வதி, இராசலட்சுமி (காலஞ்சென்ற மலைமகள்), இராஜதுரை (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சதாசிவம், பசுபதிப்பிள்ளை (மகாலிங்கம்), தம்பிராஜா, கந்தராஜா, புனிதறதி மற்றும் மனோகரன் - மலர், அமுதா - ஈசன் [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

42, புருடி லேன்,
கனகரட்ணம் ம.ம. வித்தியாலய முன்பாக,
அரியாலை,
யாழ்ப்பாணம். (34549)

## திருமதி
## வள்ளிப்பிள்ளை வினாயகம்

புலோலி மத்தி, கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி வள்ளிப்பிள்ளை வினாயகம் 5 ஆம் திகதி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரதம தபாலதிபர் வினாயகம் அவர்களின் அன்பு மனைவியும், நகுலேஸ்வரி, பத்மாசனி, விஜயலட்சுமி, சண்முகநாதன் (நிறைவேற்றுப் பொறியியலாளர், நிர்மாணத் திணைக்களம், முல்லைத்தீவு), சிவகுமாரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், வேலாயுதம் (இளைப்பாறிய பதவிநிலை உதவியாளர், உள்ளூராட்சித் திணைக்களம்), காலஞ்சென்ற துரைராஜா (நெடுஞ்சாலைகள் திணைக்களம்), குருநாதன் (கஜன் வாச் வேக்ஸ் சுன்னாகம்), தில்லைநாயகி, றஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், கதிரவேற்பிள்ளை (வீதி அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா), சிவசுப்பிரமணியம் (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, கிளிநொச்சி), நந்தகோபால் (பிள்ளையார் றேடேஸ், வவுனியா), விக்கினேஸ்வரன் (ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி), ரமேஸ் (திட்ட பொறியியலாளர் – B L. Power (Civil) Construction (Pvt ) Ltd , Colombo), கலாராணி (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை), புவனராணி (ஜேர்மனி), விஜயலட்சுமி, இந்திரகுமாரி, சசிகலா, இந்திரன், சுரேஸ், திலகநாதன், சுயர்சன், சுதாகினி, கைலாஸ், உமா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்—

கஜேந்திரன், கோபிநாத், மேகலா, குலதீபன், பிரசாத், வினோபா, சங்கர், சிறீராம் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (6 - 1 - 95) வெள்ளிக்கிழமை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. சிவகுமாரன்
(மகன்)

"பத்மவாசா"
கந்த உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை. (34536)

## சரவணமுத்து கனகலிங்கம்

சரவணமுத்து கனகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி) 5-1-1995 மாலை காலமானார்.

அன்னார் நேசமலரின் [உடற்பயிற்சி விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) அன்புக் கணவரும், சரத்சந்திரா, உத்தரை ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சரவணமுத்து - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அருமைமகனும், குமாரவேலு [இளைப்பாறிய அதிபர் எழுதுமட்டுவாள்], காலஞ்சென்ற முத்தையா [தபாற்கந்தோர் - உருத்திபுரம்], திருமதி இரத்தினம்மா, செல்வி. ஞானாம்பிகை (இளைப்பாறிய ஆசிரியை - திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கொடிகாமம்), Dr. சிவகுரு [பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி] ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்துரை - லட்சுமி தம்பதிகளின் மருமகனும், திருமதி கமலாவதி குமாரவேலு, திருமதி ராஜேஸ்வரி முத்தையா, திருமதி விக்னேஸ்வரி சிவகுரு, நடராஜலிங்கம், நேசதுரை, தர்மசீலன், பரமநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-1-95 (வெள்ளிக்கிழமை) பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

டச்சு வீதி,
சாவகச்சேரி. (34546)

# புலிகளுக்கு எதிராக நாம் எந்த ஓர் அமைப்பும் உருவாக்கத் தயாரில்லை

## சிவசிதம்பரம் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 6

விடுதலைப் புலிகளுக்கு எதிராக எந்த ஓர் அமைப்பையும் உருவாக்க நாம் தயாரில்லை.

கொழும்பு வார தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்துள்ள தமிழ் அமைப்புகளை ஒன்றுசேர்த்து செயற்படும் உத்தேசம் இருக்கிறதா என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் மக்களுக்கு ஒரே ஒரு தீர்வு சமஷ்டி முறையிலான மாநில சுயாட்சியே.

புதிய அரசமைப்புச் சட்டத்தில் அதனை உறுதி செய்தால் நாம் அதனை ஆதரிப்போம்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது.

இன்றைய நிலையில் வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சுயாட்சியே தேவையானது.

இப்படி திரு. சிவசிதம்பரம் மேலும் கூறினார். (இ)

### சக்திமிகு ஆயுதங்கள் சகிதம்

# கொள்ளையில் ஈடுபட்ட தப்பிஓடிய சிப்பாய்கள்!

## பலாலிமுகாம் சிப்பாயும் பிடிபட்டார்

கொழும்பு, ஜன. 6

அத்துருகிரிய ஐ. டி. எச். சந்தியில் கடந்த திங்களன்று சக்திமிகு ஆயுதங்களுடன் சென்று தங்க ஆபரணக் கடை ஒன்றில் கொள்ளையடித்துவிட்டுத் தப்பிச்செல்ல முயன்ற குழுவில் இருந்த ஐவரும் முன்னர் இராணுவத்தில் பணியாற்றிவிட்டுத் தலைமறைவான சிப்பாய்கள் எனத் தற்போது தெரியவந்திருக்கிறது.

இந்தச் சம்பவத்தின்போது பொலீஸாரிடம் அகப்பட்டவர் பலாலி இராணுவ முகாமின் பொறியியல் துறையைச் சேர்ந்த ஒருவர் என்றும்—

இவர் சேவையிலிருந்த சமயம் தலைமறைவானவர் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கொள்ளை நடந்த சமயம் பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட இரு கொள்ளையர்களில் ஒருவர் கொள்ளையர் வந்த ஓட்டோவைச் செலுத்தி வந்தவர் எனக் கூறப்படுகின்றது. அவரும் உயிரிழந்த மற்றையவரும் இராணுவத்திலிருந்து ஓடியவர்களே என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டோ சாரதி இராணுவத்தில் பணியாற்றி ஆயுதப் பயிற்சி பெற்ற பின்னர் தலைமறைவானவர்.

உயிரிழந்த மற்றையவர் அம்பலாங்கொடை கஹவ பகுதியைச் சேர்ந்தவர்.

தற்போது பிடிபட்டுள்ள நபர் மொனறாகலை, எம்பிலிப்பிட்டிய, வெலிஓயா பகுதி இராணுவ முகாம்களிலும் முன்னர் பணியாற்றியவர் என்று தெரியவந்துள்ளது.

உயிரிழந்த முன்னாள் சிப்பாயே கொள்ளைக்குத் தேவையான ஆயுதங்களை பெற்றுத் தந்தவர் என பிடிபட்டவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. [உ]

### தாதிமார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கம் கைவிடப்பட்டதாகத் தெரிவித்தார்.

அரசாங்க தாதிமார்கள் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை கடந்த மாதம் 21 ஆம் திகதி ஆரம்பித்திருந்தார்கள்.

இதனால் அரசாங்க ஆஸ்பத்திரிகளின் சேவை ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தது.

(முன்வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

(இ-4)

### நேர அவகாசம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்கள் ஏன் அழைக்கப்படவில்லை?"— என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இரண்டாம் கட்டப் பேச்சுகளுக்கான திகதி, நேரம், இடம் ஆகியவை பற்றிய விடயங்கள் திங்கட்கிழமையே ஊர்ஜிதப்படுத்தப்பட்டன.

"கொழும்புச் செய்தியாளர்கள் யாழ் சென்றடைவதற்கு இரண்டு நாட்கள் எடுக்கும் என்பதால் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பேச்சுக்கு அவர்களை அழைத்துச் செல்ல முடியவில்லை.

"பேச்சுக்கள் பற்றிய விவரங்கள் செய்தி தொடர்புசாதனங்களுக்கு வழங்கப்படும். சமாதானத்தை எட்டும்முயற்சியில் பத்திரிகைகளின் பங்கு மிக முக்கியமானது என்பதை அரசு உணர்ந்துள்ளது.

சமாதான முயற்சிகளில் என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்கு பத்திரிகையாளர்களுக்கு உள்ள உரிமையை நாம் அங்கீகரிக்கின்றோம்"— இவ்வாறு அமைச்சர் மேலும் கூறினார்.

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 6

பாஷையூர் கவிஞர் தேவதாசனால் எழுதப்பட்ட "என் கிராமத்தின் கதை" என்ற நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும். [இ 4]

### தமிழாராய்ச்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அ. தி. மு. கட்சியுடன் மீண்டும் கூட்டுச் சேரும் எண்ணத்துடன் தான் பிரதமர் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டார் என்ற கருத்தும் பரவியுள்ளது.

அடிக்கடி தமிழகத்துக்கு விஜயம் செய்யும் தமது மகன் பிரபாகராவின் செல்வாக்குக் காரணமாகவே பிரதமர் மாநாட்டில் கலந்து கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [அ-உ]

### ராவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களையும் அலட்சியம் செய்துவிட்டு பிரதமர் நரசிம்மராவ் தமிழ்நாடு வரவே ஆளுநர் சென்னாரெட்டி அந்தமான் தீவுகளுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

வாழைப்பாடி இராமமூர்த்தி தமிழ்நாடு வராமல் டில்லியிலேயே தங்கிவிட்டார்.

(இ-க)

### என்னை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது 12.30 மணியளவில் புத்தாண்டு பிறந்து அரை மணித்தியால நேரத்தில் சில காவல்துறை அலுவலர்கள் உள்ளே வந்து எனக்கு அளிக்கப்பட்ட வீஸா வாபஸ் பெறப்படுவதாகவும் நகன் புறப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

அதனை எழுத்து மூலம் தருமாறு நான் அவர்களிடம் கேட்டேன்.

அதைப் பற்றி அவர்கள் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை.

அதன் பின்னர், எங்களை அழைத்தவர்களிடம் கூற வேண்டும் என்று சொன்னேன்.

அதற்கும் காவல்துறையினர் இடம்தரவில்லை.

முதலாம் திகதி காலை 6 மணிக்கு நாங்கள் திருச்சிக்கு வந்தோம்.

அப்பொழுது தான் எனக்குத் தெரியும், பேராசிரியர் சண்முகதாஸும், சுவீடன் நாட்டுப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் ஷோக்கும் அவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்கள் என்று.

எமது சகாவான பேராசிரியர் வேலுப்பிள்ளை அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்ததும் தெரியவந்தது.

எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவே இது செய்யப்பட்டது என்றும் அதற்கு மேல் தமக்கு எதுவித அறிவுறுத்தலும் இல்லை என்றும் அவர்கள் சொன்னார்கள்.

கேள்வி:- நீங்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தீர்கள் என்று அவர்கள் சந்தேகம் கொண்டிருக்கலாமா?

பதில்:- விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் எந்தவிதமான தொடர்பும் எனக்கில்லை.

யாழ்ப்பாணம் எங்களுடைய மண்— எனது உத்தியோகக் கடமைகளும் அங்கேயே இருக்கின்றன.

அப்படியானால் நாங்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்வது ஒரு குற்றமாகுமா?

மற்றது அரசியல் ரீதியான பிரச்சினை எதிலும் ஆய்வாளன் என்ற முறையில் நான் சம்பந்தப்பட விரும்பவில்லை. (க)

# திருமண வரவேற்புபசார அழைப்பு

அன்பான உற்றார், உறவினர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், மாணவர்கள் அயலவர்கள் அனைவருக்கும்

| | |
|---|---|
| **இரமணீகரன்** | **சாந்தினிதேவி** |
| B A. (Hons) | (Trained Teacher) |
| (ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி) | (தி/கோணேஸ்வரா இந்துக்கல்லூரி) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் 04-12-1994 அன்று நடந்து முடிந்த திருமண வைபவத்தின் வரவேற்புபசார வைபவம் 07-01-1995 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு இல. 27, கிருஸ்ண இல்லம், பொற்பதி வீதி, கொக்குவிலில் நடைபெறவுள்ளதால்

அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

வரவேற்பாளர்: திருமதி நா. இராஜேஸ்வரி (ராசாத்தி)

கிருஸ்ண இல்லம்,
27, பொற்பதி வீதி, கொக்குவில். [சி-262]

# குறொஸ்னி மீதான ரஷ்ய விமான தாக்குதல் நிறுத்தம்

## எனினும் சண்டை நீடிப்பு

மொஸ்கோ, ஜன. 6

செசின்யாவின் தலைநகரான குறொஸ்னி மீதான விமானத் தாக்குதல்களை நிறுத்தும்படி ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்ஸின் உத்தரவிட்டுள்ளார்.

விமானத் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதாக உலக நாடுகளும் ரஷ்யா நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கண்டித்ததை அடுத்தே விமானத்தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்பட்ட போதிலும் தரையில் சண்டை தொடர்ந்து நடைபெறுவதாகவும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் செசின்யா மீதான தாக்குதல்கள் காரணமாக ரஷ்யாவுடனான பொருளாதார ஒப்பந்தத்தை தாமதப்படுத்தப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ)

# பொன்சேகா இன்னும் பதவி ஏற்கவில்லை

## ஒரு வார கால அவகாசம் கேட்கிறார்

கொழும்பு, ஜன 6

வடக்கு - கிழக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதிச் சபாநாயகரான திரு. காமினி பொன்சேகா இன்னும் பதவி ஏற்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நான்கு புதிய ஆளுநர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

அன்றைய தினம் காமினி பொன்சேகா பதவிப்பிரமாணம் செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தாம் பதவிப் பிரமாணம் எடுப்பதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்குமாறு பொன்சேகா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். [ஒ-6]

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சின்னையா

(பிரபல சோதிடர், இ. போ. ச காப்பாளர்)

அச்சுவேலி தெற்கு பயித்தோலையைச் சேர்ந்த க. சின்னையா 5 - 1 - 95 நேற்றுக் காலமானார்.

இவர் அன்னமுத்துவின் அன்புக் கணவரும், விந்தமலர், ஜெயமலர், காலஞ்சென்ற தனமலர் மற்றும் திருவருள்நாதன் (சுவிஸ்), இலட்சியநாதன், வேலருள் (சுவிஸ்), சிவகரன் (கனடா), இரவீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகலிங்கம்(ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி), தனபாலசிங்கம், லோகநாதன், குமுதினி (சுவிஸ்), கிரிஜாதேவி (சுவிஸ்), கீதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலகுமார், பாமினி, ரவிக்குமார், சசிகுமார், உதயகுமார், சயந்தன், சஜீவன், சாருதன், சங்கீதன், சர்மிலன், தீபிகா, தனுஷன், நிருதன், நிந்துஜன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 6 - 1 - 95 வெள்ளிக்கிழமை பகல் 1 மணியளவில் அச்சுவேலியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. நாகலிங்கம்
(மருமகன்)

பயித்தோலை,
அச்சுவேலி தெற்கு. (34551)

## செல்வன்
## லோறன்ஸ் அஞ்சலோ அன்ரன்

யாழ்ப்பாணக் கல்லூரியினதும், யாழ். தொழில்நுட்பக் கல்லூரியினதும் பழைய மாணவரும், தென்னிந்திய திருச்சபை வட்டுக்கோட்டை லீவைஸ் போல்டிங் ஆண்கள் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த லோரன்ஸ் அஞ்சலோ அன்ரன் 05 - 01 - 1995 இல் (நேற்று) அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. லோரன்ஸ் திரேசம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் அஞ்சலோ ஒஸ்டின் (கொழும்பு). திரேசா, அஞ்சலா, அனித்தா (உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள்), அஞ்சலோ ஜெனீஸ் குமார் (சென்ஜோசப் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவரது பூதவுடல் அஞ்சலிக்காக லீவைஸ்போல்டிங் இல்லத்தில் வைக்கப்பட்டு ஆராதனையின் பின் இன்று (06-01-95) காலை 10 மணியளவில் அவரது பண்டத்தரிப்பு வசிப்பிட இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 3 மணிக்கு இறுதி ஆராதனையுடன் பண்டத்தரிப்பு ரோமன் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மேற்பார்வையாளர்
லீவைஸ் போல்டிங் சிறுவர் இல்லம்,
வட்டுக்கோட்டை.
(சி/120)

## முத்து ஐயாத்துரை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முத்து ஐயாத்துரை நேற்றுக் காலமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும், திருமதி சந்திரவதனா, திருமதி மனோரஞ்சிதமலர், இராமச்சந்திரா (வீதி அபிவிருத்தித் திணைக்களம் இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. மெய்யழகன் [அதிபர் யா/நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை], யோ. பீ. யேசுராசன் [தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்], திருமதி இந்திரமதி இராமச்சந்திரா [ஆசிரியை] ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை [6-1-95] இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குச்சுப்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. இராமச்சந்திரா
[மகன்]

மனோகரி வாசா,
மட்டுவில் தெற்கு. [34552]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] 06-01-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org